★ விலை ரூபா 1.25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 வெள்ளி விழா ஆண்டு 1983)
மலர் 25 மார்கழி 16 ரபி அவ் 25 இதழ் 819
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31-12-83

யாழ் மாவட்டசபை வரவு-செலவுத்திட்டம்:

# உறுப்பினர்கள் இல்லாமல் அதிகாரிகளால் அங்கீகாரம்!

## வருமானம் 6 கோடி 89 லட்சம், செலவு 6 கோடி 88 லட்சம்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் 1984-ம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் உறுப்பினர்கள் எவருமே இல்லாத நிலையில் யாழ். மாவட்ட அமைச்சர் தலைமையில் அதிகாரிகளினால் விரிவாக ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அமைச்சரின் அலுவலகக் கூடத்தில் இவ்வரவு செலவுத்திட்டம் பரிசீலனைக்கு எடுக்

(12ம் பக்கம் பார்க்க)

★ சர்வஜனவாக்கெடுப்பு - 14 அம்ச யோசனையின் எதிரொலி:

# இந்திராவை சிவா, அமிர் இன்று டில்லியில் சந்திப்பார்கள்

(நமது சிறப்பு நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னாள் திருகோணமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன் ஆகிய மூவரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை மீண்டும் சந்திப்பதற்காக புதுடில்லி பயணமானார்கள். கூட்டணித் தலைவர்கள், இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதியை இன்று சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர், பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திப்பார்கள்.

சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள் மக்களின் அங்கீகாரம் பெறும் பொருட்டு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன அறிவித்ததன் எதிரொலியாகவே கூட்டணித் தலைவர்கள் சென்னையிலிருந்து மீண்டும் டில்லி பயணமானார்கள்.

### இந்தியத் தூதுவர் புதுடில்லி பயணம்

சர்வகட்சி மகாநாட்டிற்கான அழைப்பைச் சென்னையில் வைத்துக் கூட்டணித்தலைவர்களிடம் கையளித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு எஸ் ஜே எஸ். சத்வால் பின்னர் சென்னையிலிருந்து புதுடில்லி பயணமானார்.

திரு. சத்வால் புதுடில்லியில் இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர்திரு ஜி பார்த்தசாரதி, இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்து, இலங்கையில் தற்போது நிலவிவரும் நிலைமை குறித்து அவர்களுக்கு விளக்கவுள்ளார்.

உத்தேச சர்வஜன வாக்கெடுப்பு யோசனை பற்றி கூட்டணித் தலைவர்கள் நேற்று கருத்துத் தெரிவிக்கையில்; சர்வஜன வாக்கெடுப்பு யோசனை முன்னரே கைவிடப்பட்டதென்றும், இதுபற்றி திரு. பார்த்தசாரதியுடன் தாங்கள் நடத்திய பேச்சுக்களில் தெளிவாக வலியுறுத்தப்பட்டது என்றும் கூறினார்கள்.

சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பிதழில் இணைக்கப்பட்டுள்ள பதினான்கு அம்ச யோசனைகள் குறித்தும் கூட்டணித் தலைவர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் சிறப்புத் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதியுடன் கூட்டணியினர் நடத்திய இறுதிச்சுற்றுப் பேச்சுக்களில் ஏற்றுக்கொள்ளப்படாத சில யோசனைகளும் உத்தேச பதினான்கு அம்ச யோசனைகளில் இடம்பெற்றுள்ளதாம்.

### "14 அம்சங்கள் அரசின் யோசனைகளல்ல"

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டுக்கான அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ள 14 அம்சங்கள், பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கத்தின் யோசனைகளல்லவென்று மகாநாட்டுக்கான ஜனாதிபதியின் செயலாளர் திரு டயஸ் அபயசேகரா தெரிவித்துள்ளார்.

மாநாட்டுக்கான அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ள 14 அம்சங்களும் பிரச்னைகளைத் தீர்க்க அரசு தெரிவித்துள்ள

(12-ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மாநாட்டில் ஆராயப்படும் யோசனைகள்

[கொழும்பு]

எதிர்வரும் ஜனவரி 10-ல் நடைபெறவிருக்கும் வட்ட மேசை மாநாட்டில் 14 அம்சங்கள்பற்றி ஆராயப்படவுள்ளன.

இம்மகாநாட்டிற்கான அழைப்பிதழில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 14 அம்சங்கள் வருமாறு:-

○ தனியான அரசு ஒன்றை அமைத்தல் பற்றிய எண்ணத்தைக் கைவிடல்.

(12ம் பக்கம் பார்க்க)

சர்வகட்சி மாநாடு அழைப்பு:

# கூட்டணி அரசியல் குழு சென்னையில் கூடி ஆராயும்

சென்னை, டிச. 30

''இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொருட்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 10-ம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மகாநாட்டிற்கான அழைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் கிடைத்துள்ளதால் அது குறித்துக் கூட்டணியின் உயர்மட்ட அரசியல் குழு ('பொலிட் பீரோ') விரைவில் சென்னையில் கூடி ஆராயும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுச் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

கட்டிடப் புனரமைப்பின் பின்னர்
திறக்கப்படுகிறது!
OPENING
AFTER RENOVATIONS
சம்பந்தன் வைத்தியசாலையும்
வைத்திய நிபுணர்கள்
ஆலோசனை நிலையமும்
(இலங்கை வங்கிக்கு அருகாமை யாழ். பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 574/1ம் இலக்கத்தில் இயங்கி வந்த
வைத்திய சாலையும், வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையமும்
நவீன வசதிகளுக்கான புனரமைப்பு வேலைகள் முடிவுற்று
நாளை 1-1-1984 ஞாயிற்றுக்கிழமை
திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
SAMPANTHAN
Dispensary Surgery
AND SPECIALISTS CONSULTATION CLINIC
(B. R. No 15080)
(Adjoining Bank of Ceylon,
Opposite Govt. General Hospital)
574/1, HOSPITAL ROAD—JAFFNA.
(10399)

யாழ். கச்சேரி மோசடி வழக்கு:

## எதிரி விடுதலை; சாட்சிக்கு பிடிஆணை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரி மோசடி வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். வெளிநாடு சென்றுள்ள சாட்சி சிவக்கொழுந்துவுக்குபிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில், மேல்நீதிமன்ற நீதிபதி கே. பாலகிட்ணர் முன்னிலையில் 12 தினங்கள் விசாரணை செய்யப்பட்டுநேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் யாழ் கச்சேரியில், சுப்பையா தேவசகாயம் வின்சன்ட் என்பவர் பொய் ஆவணங்களைத் தயாரித்ததாகவும், பொய் ஆவணங்களைத் தயாரிக்க உடந்தையாக இருந்ததாகவும் பொய் ஆவணத்தை மெய்யானதாகப் பயன்படுத்தியதாகவும் 7,921 ரூபா பணத்தை மோசடி செய்ததாகவும் 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே. சிவநாதன் ஆஜரானார் அரசதரப்பில், சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி க ஜெயகுமார் வழக்கை நடத்தினார்.

தீர்ப்பில் நீதிபதி தெரிவித்ததாவது; ''அரச சட்டத்தரணியின் சமர்ப்பணங்களை கணித்து எதிரிக்கு எதிரான குற்றச்

(12-ம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு வினாத்தாளும் ரத்து!

(கொழும்பு)

க. பொ. த சாதாரணதர பரீட்சையின் கணித பாடம் வினாத்தாள்-I ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கணித பாட வினாத்தாள்-II மட்டும் ரத்துச் செய்யப்பட்டு ஜனவரி 11-ம் திகதி பரீட்சை நடைபெறும்

(12ம் பக்கம் பார்க்க)

## இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று காலை 8 மணியளவில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் அண்மையில் கட்டப்பட்ட 3 அறை உள்ள வீடும் 2 பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு, R. V. சுந்தரம் மே/பா ராஜன் புத்தகசாலை இல. 12 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். 10847

கொக்குவில் தலையாளி சபாபதி வீதியில், பிரம்படி வீதி சந்திக்கு அண்மையில் 1¼ பரப்பு காணியில் மூன்று அறைகளுடன் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. லட்சணமூர்த்தி, 46, குமாரசாமி வீதி (பல்கலைக்கழகம் முன்பாக), திருநெல்வேலி. 10811

கரம்பொன் கிழக்கு வேலணை வீதி ஊர்காவற்றுறையில் 20 பரப்பு தோட்டக்காணியுடன் வீடு, மின்சார வசதியுடன் விற்பனைக்கு உள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10728 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10728

நல்லஇன 1 நாள் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு தொடர்புகொள்ளவும் அண்ணுபாம், இணுவில். 10864

எந்த வியாபாரமும் செய்யக் கூடிய கடை கே. கே. எஸ். வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு 191 கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். 10862

கோப்பாய் தெற்கு V C Lane (பருத்தித்துறை வீதியிலிருந்து 4வது காணி) வீடுகட்டக்கூடிய 3½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு N. செல்வரட்ணம் "செல்வபதி" V C Lane, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 10858

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அடுத்துள்ள (A.R.K. லேனில்) 2½ பரப்பு வீடுகட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. P. C. P ஞானதுரை, கிறிஸ்மஸ் வளவு, உடுவில். 10854

கூடுதல் பயன்தரக் கூடிய நல்ல இன (Hybrid) கறித் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. மில்வைற், யாழ்ப்பாணம். 10874

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

யாழ். நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதியதமிழ்ப்படங்கள் வெளிவந்துள்ளன. உங்களை அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10593

கொழும்பில் பலரின் ஆதரவை பெற்றுவந்த Ravi Binding மீண்டும் யாழ் நகரில் சேவையாற்ற வந்து இருக்கிறோம். சகலவித பைண்டிங் வேலைகள் செய்துதரப்படும். பிரபல எழுத்தாளர்களது கட்டிய கதை புஸ்த்தகங்கள் விற்பனைக்கு இருக்கிறது. ரவி பைண்டிங், 87 பழைய மார்க்கற், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 10860

## தேவை

மணமகன் தேவை. யாழ்ப்பாண இந்து வேளாள 33வயதுடைய பெண்ணுக்கு 33-40 இடைப்பட்ட வயதுடைய அரசாங்க, வங்கி, தனியார், ஆசிரிய மணமகன் தேவை. நல்ல சூழலில் போக்குவரத்து வசதியுள்ள இடத்தில் வீடும், நகை, ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். சைவஉணவு உண்பவர்கள் விரும்பத்தக்கது முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10850 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10850

சாவகச்சேரி நகர சுற்றுடலில் நல்ல சூழ்நிலையில் சிறிய வீட்டுடன்காணி அல்லதுகாணி 4 பரப்புக்குள் தேவை. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 10839 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 10839

புதிதாகத் திறக்கப்பட்ட அச்சகத்தில் வேலை செய்வதற்கு பெண்கள் உடன்தேவை. நேரில் வரவும். கிருஷ்ணு பிரிண்டர்ஸ் 360 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10853

பாவித்த ரெலிவிசன், பாவிக்க முடியாத ரெலிவிசன், வீடியோ டெக், வீடியோ கசற் என்பன தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்குக. விளம்பர இல: 10869 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10869

பெருந்தொகையாக நல்ல விளாம்பழங்கள்தேவை. யாவ் ரெக்ஸ் லிமிடட், 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10852

சுந்தர்மடம் வேதாந்த மடத்தில் தையில் ஆரம்பிக்கவுள்ள பாலர் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட அனுபவமுள்ள ஆசிரியை தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். செயலாளர், பரிபாலன சபை. 18, குமாரசாமி வீதி யாழ்ப்பாணம். 10855

வெளிநாட்டு உள்நாட்டு உற்பத்திகளை விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு ஆங்கில அறிவுடைய பகுதிநேர விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி 10863, C/o Elanadu, Jaffna. 10863

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், ஆகிய மாவட்டங்களுக்கு எங்களுடைய தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு அனுபவமுள்ள 'வான்' விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. யாவ்ரெக்ஸ் லிமிடெட், 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10851

## WANTED

Jaffna, Hindu, Vellala Aunt Seeks For 28 Year Old English Educated, Accomplished Working Niece a Smart Partner in Govt. Corporation or Bank Service or Working in Foreign Countries Dowry Available. Apply With Horoscope and Other Details. Advt no: 10790 C/o Eelanadu, Jaffna 10790

## வகுப்புகள்

Pianoவும், Accordianனும் சனி, ஞாயிறு உட்பட திருவுதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, இல்லாலை. (மகளிர் மட்டும்). 8914

## நூல் விமர்சனம்

காரைநகர் நீலிப்பந்தனை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பிதழ்.

வெளியீடு:- ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்.

அழகாக உள்ள இந்நூல் தோற்றத்துக்கு ஏற்ப பயன் தரத்தக்க நல்ல விடயங்களுடன் வெளிவந்துள்ளது. கல்கி. அகில உலக இந்து மகா நாட்டு மலர் போன்றவற்றின் தெரிவாக அமைந்துள்ள கட்டுரைகளுடன் ஆலய வரலாறு பற்றிய கட்டுரையும், "நீலிப்பந்தனை அம்மை உலக அன்னை" என்ற கட்டுரையும் ஸ்ரீ துர்க்காதேவி தோத்திரப் பாமாலை ஆகிய 3 பகுதிகளும் இந்நூலின் பயன்பாட்டை மிகுதிப்படுத்துவனவாகவுள்ளன. இவற்றோடு மன்னர்களுக்கு அங்கமாக அமையும் படங்களும் சில இடம் பெற்று ஆலயம் பற்றிய தெளிவையும் நீலிப்பந்தனை ஆலயத்திலுள்ள மூர்த்திகளின் இயல்பையும் புலப்படுத்துகின்றன. நவீனமாக வெளிவரும் சில மலர்கள் அது தொடர்பான பல பிரமுகர்களின் சுய விளம்பரமாகவோ அல்லது சில பிரமுகர்களின் திருப்தியை நாடுவனவாகவோ படங்கள் இடம் பெற்றிருக்கும். இம்மலரில் உள்ள படங்களும் ஆலய வர

(12ம் பக்கம் பார்க்க)

## வகுப்புகள்

கர்நாடக இசைவகுப்பு-சாவகச்சேரியில் பிரபல வயலின் வித்துவான் T. V. பிச்சைப்பா அவர்களால் பாட்டு, வயலின், புல்லாங்குழல் போன்ற பாடங்கள் இசைப் பரீட்சைக்குரிய பாடத்திட்டத்திற்கமைய கற்பிக்கப்படும். வகுப்புஆரம்பம்: 14-1-84 தைப்பொங்கல்தினம். தொடர்பு முகவரி: T. V பிச்சையப்பா, கந்தசாமி கோவில்வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. 10793

## சேவை

சமூகசேவைப் பயிற்சி நிறுவனத்திற்கு பகுதி நேர லேக்மன்/போதனாசிரியரும். பகுதி நேர (G) காஸ்வெல்டர்/போதனாசிரியரும் தேவை. சகல விரங்களுடனும் 4-1-1984 க்கு முன் விண்ணப்பிக்கவும் பதிவாளர், பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ், 59, சென்ற் பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். 10747

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற வல்வெட்டித்துறை வேலுப்பிள்ளை ஆறுமுகசாமியின் மரணசாதனமில்லாத சொத்து விடயத்தில்.

—மரணமெய்தியவர்

ஆறுமுகசாமி திருநாவுக்கரசு, வல்வெட்டித்துறை

—மனுதார்

எதிராக

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல: 1181/T

1. ஆறுமுகசாமி கைம்பெண் சுந்தரவல்லி.
2. ஆறுமுகசாமி மகேஸ்வரி.
3. ஆறுமுகசாமி இராஜேஸ்வரி.
4. ஆறுமுகசாமி நாகலிங்கம்.
5. ஆறுமுகசாமி குமாரவேல்.

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமல்லாத சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி அன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்கள் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்.

வரைவு:
(சி. நாகலிங்கமுதலி)
மனுதாரின் சட்டத்தரணி
10751


### வியாபாரிகளுக்கு சலுகை

லீலா, மெய்கண்டான் மற்றும் கலண்டர்கள், டயறிகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு விலைகளுக்கு கமிஷன் வழங்கப்படும்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
போன் : 23631.

### புதிய இறுதிப்பிரிவுகள்:

CHARTERED PRELIM—1984 Nov.
I.A.B. (லண்டன்) சகலபிரிவுகளும் } 1984 June
I.A.A. (லண்டன்) பகுதி I }
ஆரம்பம்: 07-01-1984 காலை 8-15 மணி

**K.G's INSTITUE**
இலங்கை வங்கி முன்பாக,
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
10845

### நொதேண் சுண்டிக்குளி

A/L 84/85 ஆண்டிற்கான
வகுப்புகள் ஆரம்பம்
2 - 01 - 84
V. T. இராஜேந்திரா — P. ஜெயக்குமார்

11-01-84இல் நடைபெறவிருக்கும்
O/L கணித (MATHS)
மீள் பரீட்சைக்கான இலவச வகுப்புக்கள்
2 - 01 - 84இல் ஆரம்பம்

G. C. E. O/L புதிய பகல் மாலை நேர
வகுப்புக்களும்
7-ம், 8-ம், 9-ம் வகுப்புகளும் ஆரம்பம்
6 -01 - 84
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
(10868)

இலங்கை பல்கலைக்கழகங்களின்
வெளிநிலை விரிவுரைகள்
**கல்வியாண்டு 1984/85**

பேராதனை, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களின் பாடநெறிகளான

- கலை முதற் தேர்வு
- விஞ்ஞான முதற் தேர்வு
- சட்ட முதற் தேர்வு
- வணிக முதற் தேர்வு

க. பொ. த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள்
அல்லது
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்
செப்டம்பர் மாத பரீட்சை முடிவை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்
விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டையும் ரூபா 5/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி 10-1-1984
விரிவுரைகள் 14-1-1984ல் ஆரம்பமாகின்றன.

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# அங்கோலாவின் தென்பகுதியில் தென்னுபிரிக்க யுத்த விமானங்கள் தாக்குதல்!

லண்டன், டிச. 30

அங்கோலாவின் தென் பகுதியிலுள்ள நமீபியா கெரில்லாக்களின் பிரதான யுத்த தளத்தின்மீது நேற்று நான்கு தென்னுபிரிக்க யுத்த விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன.

இத்தளத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல்களையும், குண்டு வீச்சு தாக்குதலையும் தென்னுபிரிக்கா நடத்தியதாக கூறப்பட்டது.

நமீபியா கெரில்லா இயக்கத்திற்கு எதிராக தென்னுபிரிக்காவினுல் மேற்கொள்ளப்பட்ட கடுமையான இராணுவ நடவடிக்கை இதுவென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தென்னுபிரிக்க மக்கள் ஸ்தானம் இத்தாக்குதலினுல் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் தென்னுபிரிக்காவின் மூன்று யுத்த விமானங்களை தமது படையினர் சுட்டு வீழ்த்தியதாக அங்கோலா அரசாங்கம் அறிவித்துள்ளது.

## வெள்ளப்பகுதியை வெங்கட்ராமன் பார்வையிட்டார்

சென்னை டிச. 30

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பணிப்பிற்கிணங்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தமிழ்நாட்டில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக இன்று சென்னை வருகிறுர்.

இவர் தஞ்சாவூர், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்து வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவார்.

திருச்சியில் தங்கியுள்ள முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையும் இவர் சந்தித்து, அவருடன் வெள்ள நிவாரண நடவடிக்கைகள், உதவிகள் குறித்து ஆலோசனை நடத்துவார்.

தமிழ்நாட்டின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக இந்திய மத்திய அரசு முதல்கட்டமாக 3 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அதேவேளை தமிழ் நாட்டில் கடும் மழை, வெள்ளப் பெருக்குக்காரணமாகப் பலர் உயிரிழந்துள்ளதாகவும், 13,342 கால்நடைகள் அழிந்துவிட்டதாகவும், ஏழரை லட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாகவும், பலநெல்வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் தலைமைச் செயலாளர் திரு. சோக்கலிங்கம் தெரிவித்தார். (வெ)

## கவாஸ்கருக்கு இந்திரா வாழ்த்து

புதுடில்லி டிச. 30

சென்னையில் சேப்பாக்கம் மைதானத்திலுள்ள சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இந்தியாவிற்கும், மேற்கிந்தியதீவுகளுக்குமிடையிலான இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பல சாதனைகளை ஏற்படுத்திய இந்திய வீரர் சுனில் காவஸ்கருக்கு பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பல வெற்றிகளை அடைய வேண்டுமென்று இவர் காவஸ்கரை வாழ்த்தியுள்ளார்.

கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டேயும் கவாஸ்கருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (வெ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடியிருப்புகள்

### எம். ஜி. ஆர். நடவடிக்கை

சென்னை, டிச.30

தமிழ்நாட்டில் கடும்மழை, வெள்ளத்தினுல் வீடுகளை இழந்தவர்களுக்கு மாநில அரசு குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுக்கும் என்று முதலமைச்சர் திரு. எம் ஜி, ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காவிரிநீர்ப் பிரச்னை தொடர்பாக அடுத்தமாதம் 4ம் திகதி கர்நாடக முதலமைச்சருடன் பெங்களூரில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும், அவர் நேற்று திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிக்காப்டர் மூலம் பார்வையிட்ட முதலமைச்சர் எம் ஜி. ராமச்சந்திரன் தற்போது திருச்சியில் தங்கியுள்ளார். (வெ)

## மோதிலால் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்தார்

சென்னை டிச 30

இலங்கைத்தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வுகாணும்முகமாகக் கூட்டப்படவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் பொதுக் கருத்தை முன்வைப்பது தொடர்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உபதலைவர் திரு. மோதிலால் நேரு சென்னையில் தமிழர் விடுதலை கூட்டணித்தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர். (வெ)

## லக்ஷ்மிநாராயணன் விசேட பூசை

(யாழ்ப்பாணம்)

வைஷ்ணவ ஆதீனகர்த்தர் ஜி. ஜி. லக்ஷ்மிநாராயணன் சுவாமிஜியின் ஆசிரமத்தில், லக்ஷ்மி நாராயணனுக்கு நாளை காலை விசேஷ பூசைகள் நடைபெறவுள்ளன.

நாவலர் வீதியிலுள்ள ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் விசேஷ பூசைகளின் பின்னர் பட்டமளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

பண்டித வித்துவான் சைவப் புலவர் இ. திருநாவுக்கரசுவுக்கு 'நாவலர்' என்னும் பட்டமும், புலவர் பார்வதிநாத சிவத்துக்கு 'பாமணி' என்னும் பட்டமும் சுவாமிஜியால் வழங்கப்படவுள்ளன. (மா)

## தபாலில் அனுப்பப்பட்ட — ரூ. 120 முத்திரை ஒட்டிய விண்ணப்பம் 'மர்ம' மறைவு!

### நஷ்ட ஈடு கோரியவரின் அனுபவம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட ஒருவர் நஷ்டஈடுகோரி நஷ்ட ஈட்டு ஆணையாளருக்கு 120ரூபா முத்திரையொட்டிய விண்ணப்பப் பத்திரத்தை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தாராம். ஆனுல் பதிவு செய்த தபால் கிடைத்ததாகவும், அதற்குள் முத்திரை ஒட்டப்பட்ட விண்ணப்பப்பத்திரம் இல்லை என்றும் பாதிக்கப்பட்டவருக்கு பதில்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பதிவுத்தபாலுக்குள் மற்ற ஆவணங்களோடு வைக்கப்பட்டிருந்த முத்திரைஒட்டிய விண்ணப்பப்பத்திரம் மாத்திரம் எப்படி மாயமாக மறைந்திருக்கும் என்று அந்தபாதிக்கப்பட்டவர் அங்கலாய்க்கிறுர்.

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டைச் சேர்ந்த மின்சாரத் தொழிலாளியான ப. சண்முகநாதன் என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

இவர் யாழ். மாநகரசபையின் கொழும்புத்துறை உபமின்நிலையத்தில் ஊழியராக கடமையாற்றுகிறுர். கடந்த மே மாதம் 6ம் திகதி கடமையிலீடுபட்டுக்கொண்டிருந்த சமயம் மின்கம்பத்திலிருந்துதவறி விழுந்து இடுப்புக்குக்கீழ் வழங்கமுடியாத நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறுர்.

பாதிக்கப்பட்ட ஊழியர் தமக்கு நஷ்டஈடு வழங்கும்படி யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைத்திருந்தார்.

"தொடர்ந்து வேலை செய்ய முடியாத நிலையில் இருப்பதாக வைத்தியகுழு தெரிவித்துள்ளதாலும் 10 வருட கால சேவையில் இவர் இல்லாததாலும் ஒய்வூதியம் பெற உரிமையற்றவராக இருக்கிறுர் என்று ஆணையாளர் அறிவித்துள்ளாராம்.

பாதிக்கப்பட்டவர் எதிர்பார்த்த நஷ்டஈடு கிடைக்காததால் 'ஊழியர் நஷ்டஈட்டு ஆணையாளரிடம் 60 ஆயிரம் ரூபா நஷ்டஈடு கோரி 120 ரூபா கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்ததாகவும், அங்கு பதிவுத்தபால் கிடைத்தபோதிலும் முத்திரை ஒட்டப்பட்ட விண்ணப்பப் பத்திரம் அதற்குள் இருக்கவில்லை என்று தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் சொன்னுர்.

பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட விண்ணப்பபத்திரத்துக்கு இக்கதியானுல் சாதாரணமான விஷயங்கள் எப்படி இருக்கும்? (மா)

## 'யுனெஸ்கோ'விலிருந்து அமெரிக்கா விலகும்!

வாஷிங்டன் டிச. 30

ஐ. நா. வின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனமான 'யுனெஸ்கோ' விலிருந்து விலகப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நலன்களுக்கு "யுனெஸ்கோ" வினுல் எவ்வித பயனுமில்லாததினுலேயே அதிலிருந்து விலகுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

1984 - ம் ஆண்டு டிசம்பர் 31-ம் திகதி 'யுனெஸ்கோ' விலிருந்து அமெரிக்கா வெளியேறிவிடும் என்று கூறப்பட்டது. (வெ)


பயிற்சிகள்

International Telex Operators

செய்முறைப் பயிற்சியுடன் இங்கு மட்டுமே பயிற்சியளிக்கப்படுகின்றன.

★ Hotel Management

வெளிநாட்டுக் HOTELகளில் வேலைசெய்வதற்கேற்ற முறையில் பயிற்சியளிக்கப்படும்.

★ 3 மாத Spoken English

ஆசிரியர்: T. NALLATHAMBY (Dip-In-English)
SAM SOMASUNDARAM.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் 05-01-1984

THE SCHOOL OF COMPUTER STUDIES,
52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810

2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480

3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
468, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 33277

### மணிவாக்கு

நன்றென்றுந் தீதென்றுந் நானென்றுந்
தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவ மாஞ்சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவாதேடும் பொருள்

- ஔவையார்

# நமதுநோக்கு

## புத்தாண்டுப் பிரார்த்தனை

இன்றுடன் பூர்த்தி விழாக்காணும் இவ்வாண்டுக்குப் பிரியாவிடை கூறுவதில் மக்கள் எல்லோரும் குறிப்பாக இங்குவாழும் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைவது இயற்கை.

துன்பத்தில் வெறுப்படைவதும் மனித இயல்பு. அதனை அவ்வாறு ஒத்துக்கொள்ளாவிடின் பத்திரிகைக்காரன் தத்துவமேதையாக மாறும் பேராசையில் பைத்தியக்காரனுய் விட்டானென்று உலகம் கேலி செய்யும்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது இந்த ஜனநாயக காலத்தில் உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்படுமென்ற நம்பிக்கை எமக்கல்லை.

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பாடிவிட்டதால் ஒவ்வொருவரும் தானே அரசன் என்று இறுமாப்புக்கொள்வதை நாம் தடுத்துவிடமுடியாது. இந்தச் சின்னஞ்சிறிய நாட்டிலேயே 12 எதிர்க்கட்சிகள் இயங்குகின்றன. ஆளுங்கட்சிதானும் ஒற்றுமைப்பட்ட ஒருகட்சியென்று கொள்வது எல்லாக்காலத்திலும் சரியாகாது.

எனவே பேதங்கள் மோசமடையும்நிலையில் தலைதூக்கும் நெருக்கடியால் உலகிலும், நாட்டிலும் துன்ப நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

உலகம் ஒருபெரும் அணு ஆயுத யுத்தத்திலிருந்து தப்புவது நாம் புதுவருடத்தில் காண விழையும் விடயங்களில் முதலாமிடம் பெறுகிறது

அதேபோன்று எங்கள் நாட்டிலும் ஒற்றுமை மூலம் இதுகாறும் காணமுடியாத விடிவை தமிழ் மக்கள் காண பேரவாப் படுகின்றனர் என்பது மிகையாகாது.

உலக நிகழ்ச்சிகள் மக்கள் சக்திக்கு அப்பாற்படுவதும் உண்டு. அத்தகட்டத்தில் அவற்றை நாம் தெய்வநியதி என்று கொள்வது வழக்கம். அது அத்தியாரமற்ற வழக்கமென்று கொள்வது, அனுபவத்துக்குப் பொருந்தாதிருப்பதை நாம் காண முடிகிறது.

நாம் ஒன்றை நினைக்க விதி வேறொன்றை செய்து முடிப்பது நாம் சாதாரணமாகக் காணும் காட்சி எல்லாவிடயங்களும் சரிவர. நாம் துள்ளுமளவிற்கு ஆனந்தப்பட, சடுதியில் அது துன்பத்தில் முடிந்து விடுகிறது.

இதற்கு நேர்மாறாக கெட்டகுடியே கெடுமென்று நாம் சோகநாடகம் நடித்துக் கொண்டுவர இறுதியில் எல்லாத் தோல்விகளும் வெற்றியாக மாறுவதுமுண்டு உலகத்தின் ரகசியங்களை கரைத்துக் குடித்தமகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் இன்றும் மனித வர்க்கத்துக்கு ஒளிவிளக்காக இருப்பதால் அவற்றை நாம் எந்த மொழியிலும் படித்து உணர்வது அவசியம்.

மகாத்மா காந்தியும் டாக்டர் அல்பேட் சுவீட்சரும் திருக்குறளைப் படிக்க தமிழ் படிக்க எத்தனித்தார்களென்றல் நாம்ஷேக்ஸ்பியர்படிக்க ஆங்கிலம் படிப்பது எத்துணை விவேகமான செயல்!

மனிதன் நினைவுகளால் வாழ்கின்றான் என்றுரைத்தல் பொருந்தும்; அந்நினைவுகளில் நல்லன அவனை உயர்த்துகின்றன; தீயன அவனைத் தாழ் நிலைக்கு அழுத்துகின்றன. தாழ் நிலைக்கு அழுத்தப்படாமல் அவன் தப்ப நினைத்தால், நல்ல நினைவுகளால் அவன் உயர வேண்டும்.

இந்த அடிப்படையில் புத்த பெருமான் உலகுக்கு காட்டிய 'தியானம்' நினைவுகள் நெறிமாறுமல் இருக்க பெரிதும் உதவும்.

கருணை ஒரு கிறீஸ்துவையும் தியானம் ஒரு புத்தரையும் உலகுக்களித்திருக்கிறதென்று ஒரு அறிஞர் குறிப்பிட்டது நினைவுக்கு வருகின்றது.

துன்பம் தந்த இந்த ஆண்டை நாம் பழி கூருது, நடந்தவையெல்லாம் நல்ல குருநாதர் நமக்குத் தந்ததென்றும், எம்மை வருத்த வல்ல, எங்கள் பொல்லாவினை தீர்க்கவென்ற மன உறுதியுடனும் புத்தாண்டை வரவேற்பது விவேகமான வழி

'... முடியாதினித் துயரம் படடதெல்லாம் போதும்' என்றும், மக்களுக்கும் அரசுக்கும் இருள் நீக்கி நல்லறிவென்னும் ஒளி வழங்க வேண்டுமென்றும் பிரார்த்திப்பது மிகப் பொருத்தமாகும்.

ஒன்று அவசியமானது! பிரார்த்திக்கும் நெஞ்சில் அன்பெனும் விளக்கு ஒளி விட்டெரியாவிட்டால்கவலை இருள்தொடரவே செய்யும்.

நெஞ்சம் மலர, நேர்மை செழிக்க புத்தாண்டு பிறக்க வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறோம்,

## திருவாசகம் ஓதுதல் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

1984-ம் ஆண்டு முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் மாலை வரை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் முற்றோதும் நிகழ்ச்சி சபையின் நீராவியடி கல்லூரிவீதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். சிவனடியார்கள் சுவாமிமார், திருமுறை விற்பன்னர், பக்திப்பாடகர்கள் யாவரும் கலந்து சிறப்பிப்பார்கள்.

தூர இட பஸ் சேவைகள்:

# மீண்டும் பண்ணையிலிருந்து நடாத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது

## யாழ். மாநகரசபை ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் பண்ணை பஸ்நிலையம், ஆணையாளர் நிர்வாக காலத்தில் நிறுவப்பட்டு, அங்கிருந்தே தூர இடங்களுக்கான பஸ் சேவை நடந்தது. பின்னர் தூரஇட பஸ் சேவைகள் மீண்டும் பழையபஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. மீண்டும் தூரஇட பஸ் சேவைகளை பண்ணையிலிருந்து நடாத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது."

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ. கே, சிவஞானம், 84 வரவு செலவுத்திட்ட சமர்ப்பித்தல்: சபை அதிகாரிகள் மாதாந்த மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு சிவஞானம் மேலும் கூறியதாவது; "மீண்டும் தூர இட பஸ்சேவையை பண்ணையிலிருந்து நடத்துமாறு வட பிராந்திய போக்குவரத்து சபையைக் கேட்டுள்ளேன். வ. போ. ச பஸ்கள் பழைய பஸ் நிலையத்திலிருந்து தூர இட பஸ் சேவையை நடாத்த மினிபஸ்கள் எப்படி பண்ணையிலிருந்து நடாத்த முடியும்? தூர இடபஸ், பிரயாணிகளை, பழைய பஸ்நிலையத்தில் இறக்கி விட்டு, பண்ணை பஸ் நிலையத்திலிருந்து தூரஇட பிரயாணிகளை வ. போ. ச. ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். ஏதாவது ஒருநல்ல முடிவு ஏற்படும் என நம்புகிறேன்.

### மணிக்கூட்டுக் கோபுரம்

"யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூட்டைத் திருத்துவதற்கு நாலரை லட்சம் ரூபா செலவானது என்று பேசப்படுகிறது. சரியான விபரங்கள் தெரியாமல் எதையும் பேசக்கூடாது. அப்படி சந்தேகம் இருந்தால் எங்களிடம் கேட்க வேண்டும். சிலர் குறை சொல்லவென்றே இருக்கிறார்கள். அவர்களைத் திருத்தமுடியாது நிறைகளையும் சொல்ல வேண்டும். மணிக்கூட்டுக்கு 1 லட்சத்து 48 ஆரத்து 800 ரூபா மட்டுமே செலவானது. நாலரை லட்சம் ரூபா மதிப்பீடு. இதை புரிந்து கொள்ள முடியாமல் சிலர் பேசிவருகின்றார்கள்.

### வீதி வெளிச்சம்

"வீதி வெளிச்சத்திற்கான செலவு வருடா வருடம் அதிகரித்து வந்துள்ளது. 79ம் ஆண்டு 3,90,000 ரூபா, 80ம் ஆண்டு 4,77,000 ரூபா, 81ம்ஆண்டு 6,50,0 0 ரூபா, 82ம் ஆண்டு 9, 50,000 ரூபா, 83ம் ஆண்டு 31,00,000 ரூபா, 84 ம்ஆண்டு 38 லட்சமாக அதிகரித்துள்ளது இதனைக் குறைத்து அப்பணத்தை நகர அபிவிருத்திக்குச் செலவிட நடவடிக்கை எடுத்துள்ளேன்.

"1976ம் ஆண்டு நல்லூர் கல்யாண மண்டபம் கட்டப்பட்டது. 7 வருடகாலத்தில் அங்கு 6 கலியாணங்கள் மட்டுமே நடந்தன. யாழ்ப்பாணத்தில் மற்றும் கல்யாணம் நடக்கும் மண்டபங்களுடன் கல்யாண மண்டபம் செயல்பட முடியாமல் உள்ளது. இந்தக் கல்யாண மண்டபத்தை 'இந்து லாட்ஜ்'சாக மாற்றத் தீர்மானித்து, அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை காலமும் கல்யாண மண்டப நிர்வாக செலவாக வருடம் 3600 ரூபா செலவிடப்பட்டுள்ளது கடந்த ஏழுவருடமும், இதற்கு இரண்டரை லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ளதுபோல் 'இந்து லாட்ஜ்' சாக மாற்றத்திட்டமிட்டுள்ளோம் இதற்கு மூன்றரை லட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### துரையப்பா விளையாட்டரங்கு

"யாழ். துரையப்பா விளையாட்டரங்கில், கடந்த சில வருடங்களாக விளையாட்டு எதுவும் நடைபெறவில்லை. மக்கள் பயமின்றிச் செல்வதற்காக, விளையாட்டரங்கின் வாசலை நூல்நிலையபக்கமாக மாற்ற அனுமதி கோரியுள்ளேன். துரையப்பாவிளையாட்டு அரங்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவில் திருத்தப்படும் இதற்கு 75,000 ரூபா அரசிடமிருந்து பெறப்படும். வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்.

### குடிநீர்த் திட்டம்

யாழ்ப்பாண குடிநீர் வசதிக்காக 'யூனிசேவ்ப்' திட்டத்தின் கீழ் 7குழாய்க்கிணறுகள் அமைக்கப்படும் தண்ணீர் தாங்கி மூலம், அந்தந்தப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படும். 75-ம் 76-ம் ஆண்டு பதிவு செய்தவர்களுக்கு கூட இன்னும் குடிநீர் வழங்கவில்லை. பதிவுசெய்யப்பட்ட முதல் நூறுபேரில் இதுவரை குடிநீர் வழங்காதவர்களுக்கே தற்போது குழாய்நீர் வழங்கப்பட்டுவருகிறது.

### மின்பாவனை

மின்பாவனையாளர் ஒருவர் 15 யூனிட் தவறுதலாக போடப்பட்டதற்கு பிரதமருக்கு புகார் செய்திருக்கிறார். 14,000 மின்பாவனையாளருக்கு சேவை செய்கிறோம் மாதம் தவருமல், 'பில்' அனுப்பப்படுகிறது இரண்டொருவருக்கு தவறுதலாக பிழை ஏற்பட்டால் அது என்ன பெரிய தவறு?

யாழ் நவீன மார்கட் வாசல்களுக்கு இரும்புக்கதவுகள் போட 3 லட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குழாய்க்கம் பம்மூலம் தண்ணீர் விநியோகம் இல்லாத பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்காக தண்ணீர் பௌசர் ஒன்று வாங்குவதற்கு 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சபையின் மின்சார பகுதி கட்டட விஸ்தரிப்புக்கு 1,10,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய உப-மின் நிலையங்கள் அமைப்பதற்கும், தற்போதுள்ள மின் நிலையங்களை திருத்துவதற்கும் ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது நகரை அபிவிருத்தி செய்ய உத்தியோகத்தர்களதும், வரியிறுப்பாளரதும் ஒத்துழைப்பு தேவை. (க)

## இயந்திர பூசை

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை-சரவனை கர்ணன் தோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது

இக்கும்பாபிஷேகத்தை யொட்டி கடந்த 19ம் திகதி தொடக்கம் இயந்திர பூசை தினமும் நடைபெற்றுவருகின்றது 45 நாட்கள் நடைபெறவிருக்கும் இயந்திர பூசையில் பங்குபற்ற விரும்புபவர்களுக்கு இது ஒரு சந்தர்ப்பமாகும். (ப)

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி என். தெய்வேந்திரன், இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி எம். ஆர். பாலேந்திரா ஆகியோரது சேவைகளைக் கௌரவித்து பாராட்டு விழா இன்று வித்தியாலயத்தில்வித்தியாலய அதிபர் திருமதி பீ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (சூ)

## 10 லட்சம் வீட்டுத் திட்டம்

### ஏழை மக்களுக்கு வரப்பிரசாதம்!


(அரியாலை)

"பிரதம மந்திரியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 10 லட்சம் வீடு அமைக்கும் திட்டம் குடிசைகளில் வாழும் மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையும்"

இவ்வாறு யாழ் வீடமைப்பு திட்டமிட அதிகாரி திரு. கே. சச்சிதானந்தம், யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற 10 லட்சம வீடமைப்புத் திட்டம் சம்பந்தமான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், வீடில்லாதோரின் வீட்டுப் பிரச்னையைத் தீர்க்குமுக

12-ம் பக்கம் பார்க்க)



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். - குறள்.

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று
வாழ்பவன் தெய்வமுறையில் மதிக்கப்படுவான்.




**மில்க்வைற்**

உற்பத்திகளுக்குக் கிடைக்கும்
ஆதரவு நாட்டின் நற்பணிக்கே.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23233



# ஈழநாடு

## THE EELANADU
## NATIONAL TAMIL DAILY



அண்ணா தயாரிப்புகளான
கோப்பி, தேயிலை, பற்பொடி
ஊதுபத்தி ஆகியவற்றுடன்
கற்பூரம், இனிப்பு, டொபி
வகைகளையும்
அண்ணா தொழிலகம்
அறிமுகப்படுத்தியுள்ளது.
இவற்றின் வெற்றுப் பைக்கட்டுகளை அனுப்பி
பரிசுப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




**அண்ணா தொழிலகம்**
இணுவில். தொலைபேசி: 23412


"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்தமிழ்—இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" —பாரதிதாசன்

# பஞ்சாங்கம் 1984

## 1984

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் |
|---|---|---|---|
| ஞா | 1 8 15 22 29 | 5 12 19 26 | 4 11 18 25 |
| தி | 2 9 16 23 30 | 6 13 20 27 | 5 12 19 26 |
| செ | 3 10 17 24 31 | 7 14 21 28 | 6 13 20 27 |
| பு | 4 11 18 25 | 1 8 15 22 29 | 7 14 21 28 |
| வி | 5 12 19 26 | 2 9 16 23 | 1 8 15 22 29 |
| வெ | 6 13 20 27 | 3 10 17 24 | 2 9 16 23 30 |
| ச | 7 14 21 28 | 4 11 18 25 | 3 10 17 24 31 |

| | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|
| ஞா | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| தி | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| செ | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| பு | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| வி | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| வெ | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| ச | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |

| | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் |
|---|---|---|---|
| ஞா | 1 8 15 22 29 | 5 12 19 26 | 30 2 9 16 23 |
| தி | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 |
| செ | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 |
| பு | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| வி | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| வெ | 6 13 20 27 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| ச | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 |

| | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|
| ஞா | 7 14 21 28 | 4 11 18 25 | 30 2 9 16 23 |
| தி | 1 8 15 22 29 | 5 12 19 26 | 31 3 10 17 24 |
| செ | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| பு | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| வி | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| வெ | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| ச | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |

## ருதிரோற்காரி — இரத்தாக்ஷி

| | மார்கழி - தை | தை - மாசி | மாசி - பங்குனி |
|---|---|---|---|
| ஞா | 17 24 1 8 15 | 22 29 7 14 | 21 28 5 12 |
| தி | 18 25 2 9 16 | 23 1 8 15 | 22 29 6 13 |
| செ | 19 26 3 10 17 | 24 2 9 16 | 23 30 7 14 |
| பு | 20 27 4 11 | 18 25 3 10 17 | 24 1 8 15 |
| வி | 21 28 5 12 | 19 26 4 11 | 18 25 2 9 16 |
| வெ | 22 29 6 13 | 20 27 5 12 | 19 26 3 10 17 |
| ச | 23 30 7 14 | 21 28 6 13 | 20 27 4 11 18 |

| | பங்குனி - சித்திரை | சித்திரை-வைகாசி | வைகாசி - ஆனி |
|---|---|---|---|
| ஞா | 19 26 3 10 17 | 24 31 7 14 | 21 28 3 10 |
| தி | 20 27 4 11 18 | 25 1 8 15 | 22 29 4 11 |
| செ | 21 28 5 12 | 19 26 2 9 16 | 23 30 5 12 |
| பு | 22 29 6 13 | 20 27 3 10 17 | 24 31 6 13 |
| வி | 23 30 7 14 | 21 28 4 11 18 | 25 32 7 14 |
| வெ | 24 1 8 15 | 22 29 5 12 | 19 26 1 8 15 |
| ச | 25 2 9 16 | 23 30 6 13 | 20 27 2 9 16 |

| | ஆனி - ஆடி | ஆடி - ஆவணி | ஆவணி-புரட்டாதி |
|---|---|---|---|
| ஞா | 17 24 31 7 14 | 21 28 3 10 | 14 17 24 31 7 |
| தி | 18 25 1 8 15 | 22 29 4 11 | 18 25 1 8 |
| செ | 19 26 2 9 16 | 23 30 5 12 | 19 26 2 9 |
| பு | 20 27 3 10 | 17 24 31 6 13 | 20 27 3 10 |
| வி | 21 28 4 11 | 18 25 32 7 14 | 21 28 4 11 |
| வெ | 22 29 5 12 | 19 26 1 8 15 | 22 29 5 12 |
| ச | 23 30 6 13 | 20 27 2 9 | 16 23 30 6 13 |

| | புரட்டாதி - ஐப்பசி | ஐப்பசி கார்த்திகை | கார்த்தி-மார்கழி |
|---|---|---|---|
| ஞா | 21 28 5 12 | 19 26 3 10 | 15 17 24 1 8 |
| தி | 15 22 29 6 13 | 20 27 4 11 | 16 18 25 2 9 |
| செ | 16 23 30 7 14 | 21 28 5 12 | 19 26 3 10 |
| பு | 17 24 1 8 15 | 22 29 6 13 | 20 27 4 11 |
| வி | 18 25 2 9 | 16 23 30 7 14 | 21 28 5 12 |
| வெ | 19 26 3 10 | 17 24 1 8 15 | 22 29 6 13 |
| ச | 20 27 4 11 | 18 25 2 9 | 16 23 30 7 14 |

## ஹிஜ்ரி 1405 — 1406

| | ரபிஅவ் - ரபீஆகிர் | ரபிஆ-ஜமாதிஅவ் | ஜமாதி-ஜமா ஆகிர் |
|---|---|---|---|
| ஞா | 26 4 11 18 25 | 2 9 16 23 | 30 7 14 21 |
| தி | 27 5 12 19 26 | 3 10 17 24 | 1 8 15 22 |
| செ | 28 6 13 20 27 | 4 11 18 25 | 2 9 16 23 |
| பு | 29 7 14 21 | 28 5 12 19 26 | 3 10 17 24 |
| வி | 1 8 15 22 | 29 6 13 20 | 27 4 11 18 25 |
| வெ | 2 9 16 23 | 30 7 14 21 | 28 5 12 19 26 |
| ச | 3 10 17 24 | 1 8 15 22 | 29 6 13 20 27 |

| | ஜமாஆகிர் - றஜப் | றஜப் - ஷஃபா | ஷஃபா-றம்ழான் |
|---|---|---|---|
| ஞா | 28 5 12 19 26 | 4 11 18 25 | 2 9 16 23 |
| தி | 29 6 13 20 27 | 5 12 19 26 | 3 10 17 24 |
| செ | 30 7 14 21 | 28 6 13 20 27 | 4 11 18 25 |
| பு | 1 8 15 22 | 29 7 14 21 28 | 5 12 19 26 |
| வி | 2 9 16 23 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| வெ | 3 10 17 24 | 2 9 16 23 | 30 7 14 21 28 |
| ச | 4 11 18 25 | 3 10 17 24 | 1 8 15 22 29 |

| | ஷவ்வால்-ஜுல்ஹஃ | ஜுல் - ஜுல்ஹஜ் | ஜுல்ஹ-முஹறம் |
|---|---|---|---|
| ஞா | 1 8 15 22 29 | 7 14 21 28 | 4 5 12 19 26 |
| தி | 2 9 16 23 1 | 8 15 22 29 | 6 13 20 27 |
| செ | 3 10 17 24 2 | 9 16 23 30 | 7 14 21 28 |
| பு | 4 11 18 25 | 3 10 17 24 1 | 8 15 22 29 |
| வி | 5 12 19 26 | 4 11 18 25 2 | 9 16 23 1 |
| வெ | 6 13 20 27 | 5 12 19 26 3 | 10 17 24 2 |
| ச | 7 14 21 28 | 6 13 20 27 | 4 11 18 25 3 |

| | முஹறம் - ஸபர் | ஸபர் - ரபியுஅவ் | ரபியுஅ ரபியுஆகிர் |
|---|---|---|---|
| ஞா | 11 18 25 3 | 10 17 24 1 | 7 8 15 22 29 |
| தி | 5 12 19 26 4 | 11 18 25 2 | 8 9 16 23 1 |
| செ | 6 13 20 27 5 | 12 19 26 3 | 10 17 24 2 |
| பு | 7 14 21 28 6 | 13 20 27 4 | 11 18 25 3 |
| வி | 8 15 22 29 | 7 14 21 28 5 | 12 19 26 4 |
| வெ | 9 16 23 1 | 8 15 22 29 6 | 13 20 27 5 |
| ச | 10 17 24 2 | 9 16 23 30 | 7 14 21 28 6 |

### தபால், தந்தி விகிதங்கள்
(மாற்றத்திற்கு உரியவை)

| உள்நாடு | ரூ. ச. |
|---|---|
| போஸ்ற்காட் | -35 |
| 30 கிறும்ஸுக்கு மேற்படாத கடிதத்திற்கு | -60 |
| மேற்பட்ட 30 கிறும்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | -60 |

### ஆலய உற்சவ தினங்கள்

ஜன. 05 பொன்னாலை வரதராஜப் பெரு. கொடி
... 13 ... ... தேர்
பெப். 16 கீரிமலை நகுலேஸ்வரர் கொடி
... 29 ... ... தேர்
மார்ச் 01 வண்ணை வைத்தீஸ்வரர் கொடி
... 06 இணுவில் சிவகாமி அம்மை கொடி



### பெரியார் தினங்கள்

ஜன. 01 இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை
... 09 சேர் பொன் அருணாசலம்
... 22 சுவாமி ஞானப்பிரகாசர்
... 30 காந்திஜி அமரத்துவ தினம்

### இந்துக்களின் விசேஷ தினங்கள்

ஜனவரி 14 சுவர்க்கவாயில் ஏகாதசிவிரதம்
... 15 தைப்பொங்கல்
... 16 பட்டிப்பொங்கல்
... 19 தைப்பூசம்
பெப்ர 17 மாசி மகம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெ | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | வெ | 19 26 3 10 | 17 24 1 8 15 | 22 29 6 13 | வெ | 9 16 23 1 | 8 15 22 29 6 | 13 20 27 5 |
| ச | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | ச | 20 27 4 11 | 18 25 2 9 | 16 23 30 7 14 | ச | 10 17 24 2 | 9 16 23 30 | 7 14 21 28 6 |

## தபால், தந்தி விகிதங்கள்

(மாற்றத்திற்கு உரியவை)

| உள்நாடு | ரூ. ச. |
|---|---|
| போஸ்ற் காட் | -35 |
| 30 கிறும்ஸுக்கு மேற்படாத கடிதத்திற்கு | -60 |
| மேற்பட்ட 30 கிறும்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | -60 |
| விமானத் தபால் கட்டணத்திற்கு | No Service |
| பதிவுக் கட்டணம் | 4-00 |
| அவசர விநியோகக் கட்டணம் | 5-00 |
| பார்சல் முதல் ½ கிலோ | 2-50 |
| மேற்பட்ட ஒவ்வொரு ½ கிலோவுக்கும் (ஆகக்கூடிய நிறை 11 கிலோ) | 1-25 |
| 120 கிறும்ஸ் நிறைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட புதினப் பத்திரிகை | -40 |
| மேற்பட்ட ஒவ்வொரு 120 கிறும்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | -40 |
| அச்சிட்ட திறந்த பக்கற் முதல் 30 கிறும்ஸுக்கு | -35 |
| மேலதிக 60 கிறும்ஸுக்கு | -25 |
| தபாலில் சேர்க்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் | 3-00 |
| சுணக்கத் தபால் கட்டணம் (மேலதிக) | 1-00 |
| சாதாரண தந்தி-10 சொற்கள் வரை | 1-00 |
| மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் | -15 |
| அவசரத் தந்தி-10 சொற்கள் வரை | 2-00 |
| மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் | 30 |
| போஸ்ரல் ஓடர் கொமிஷன் | |
| -/50 தொடக்கம் 1-50 வரை | -15 |
| ரூபா 2/- தொடக்கம் ரூ. 4/- வரை | -25 |
| ரூபா 5/- தொடக்கம் ரூ. 10/- வரை | -40 |
| ரூபா 15/- தொடக்கம் ரூ. 20/- வரை | -50 |
| மணிஓடர் கொமிஷன் ரூபா 50/-க்கு | 1-00 |
| 50 ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு—ஒவ்வொரு 50 ரூபாவுக்கும் | 1-00 |
| (மணிஓடர் ஆகக்கூடிய தொகை ரூபா 1000/-) | |
| தந்தி மணிஓடர் சாதாரண மணிஓடர்— கொமிஷனுடன் ரூபா 2-50ம் தந்திச் செலவும் | |
| மிகுதித் தொகைக்கு ரூபா 1000/- வரை | -50 |
| இன்சூரன்ஸ் கட்டணம் ரூபா 100/- வரை | 4-00 |
| மேலதிக ரூபா 100-க்கு அல்லது அதன் பகுதிக்கு | 4-00 |
| பத்திரிகைகள், வெளியீடுகளுக்கான வருடாந்த பதிவுக் கட்டணம் | 100-00 |

## வெளிநாட்டு தபால் கட்டணங்கள்

விமான தபால் சேவை

| | முதல் 10 கிறும்ஸுக்கு, 1-ம் வகுப்பு கடிதங்கள் | முதல் 20 கிறும்ஸுக்கு 2-ம் வகுப்பு கடிதங்கள் | விமானப் பார்சல் அரை கிலோ |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| கனடா | 9-00 | 9-00 | 180-00 |
| மக்கள் சீனக் குடியரசு | 7-00 | 7-00 | 150-00 |
| துபாய் | 6-00 | 6 00 | |
| ஜப்பான் | 7-00 | 7-00 | 185-00 |
| இந்தியா | 5-50 | 5-00 | 120-00 |
| குவைத் | 6-00 | 6-00 | |
| லிபியா-ஈரான் | 6-00 | 6-00 | |
| மலேசியா | 6-00 | 6 00 | 90-00 |
| சிங்கப்பூர் | 6-00 | 6-00 | 90-00 |
| மாலைதீவு | 5-50 | 5 00 | |
| நோர்வே | 7-00 | 7-00 | |
| ஓமான் | 6-00 | 6-00 | |
| பாகிஸ்தான் | 5-50 | 5-00 | 125-00 |
| சவுதி அரேபியா | 6-00 | 6-00 | |
| ஜெர்மன் சமஷ்டிக் குடி. | 7-00 | 7-00 | 155-00 |
| பிரான்ஸ் | 7-00 | 7-00 | 270-00 |

★ மேலதிக 10 கிறும்ஸ் நிறைக்கும், அச்சிட்ட விடயங்களுக்கும் முதல் மூன்று பிரிவுகளிலும் முறையே ரூபா 1-50, 2-00, ரூபா 2-00, 3-00, ரூபா 2-50, 4-00 ஆகும். நான்காவது பிரிவுக்கு 10 கிறும்ஸுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 10 கிறும்ஸுக்கும் ரூபா 5-00 அச்சிட்ட விடயங்களுக்கு ரூபா 7-00 அறவிடப்படும்.

தபால் அட்டைகள் நான்கு பிரிவுகளுக்கும் புதிய கட்டணம் முறையே ரூபா 5-00, ரூபா 5-00, ரூபா 6-00, ரூபா 6-00 ஆகும்.

## ஆலய உற்சவ தினங்கள்

ஜன. 05 பொன்னாலை வரதராஜப் பெரு. கொடி
... 13 ... ... தேர்
பெப். 16 கீரிமலை நகுலேஸ்வரர் கொடி
... 29 ... ... தேர்
மார்ச் 01 வண்ணை வைத்தீஸ்வரர் கொடி
... 06 இணுவில் சிவகாமி அம்மை கொடி
... 16 வண்ணை வைத்தீஸ்வரர் தேர்
... 28 மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி
... 28 நீர்வேலி கந்தசுவாமி கொடி
ஏப்ரல் 13 மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்
... 14 நீர்வேலி கந்தசுவாமி தேர்
... 15 சண்டிருப்பாய் சீரணி நாகம்மாள் தேர் தீர்த்தம்
மே 05 அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் [கொடி
... 06 திருக்கேதீச்சரம் கொடி
... 14 கும்பளாவளைப் பிள்ளையார் தேர்
... 15 திருக்கேதீச்சரம் தீர்த்தம்
ஜூன் 02 சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணியர் கொடி
... 04 இணுவில் கந்தசுவாமி கொடி
... 12 சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணியர் தேர்
... 18 வண்ணை வீரமாகாளியம்மை கொடி
... 28 நயினாதீவு நாகபூஷணி கொடி
ஜூலை 04 மாவிட்டபுரம் கந்தசுவாமி கொடி
... 11 வண்ணை வீரமாகாளி—நயினாதீவு நாகபூஷணியம்மை தேர்
... 28 மாவிட்டபுரம் கந்தசுவாமி தீர்த்தம்
... 28 கதிர்காமம் கொடி
ஆக. 02 நல்லூர் கந்தசுவாமி கொடி
... 11 கதிர்காமம் தீர்த்தம்
... 25 நல்லூர் கந்தசுவாமி தேர்
... 26 தொண்டமானாறு செல்வச்சந்நிதி கொடி
... 27 தெல்லிப்பழை துர்க்காதேவி கொடி
செப். 06 ... ... தேர்
... 09 செல்வச்சந்நிதி தேர்
... 24 வல்லிபுரம் ஆழ்வார் கொடி
... 25 வண்ணை வெங்கடேசப் பெருமாள் கொடி
அக். 03 ... ... ... தேர்
... 08 வல்லிபுரம் ஆழ்வார் தேர்
... 10 நாகர்கோவில் நாகதம்பிரான் கப்பற் திருவிழா
டிசம். 28 காரைநகர் சிவன்—மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை கொடி

## பாடசாலைத் தவணை - 1984

தமிழ்-சிங்கள பாடசாலைகள்

1-ம் தவணை: 23-01-1984 — 06-04-1984 (இரு தினங்களும் உட்பட)
2-ம் தவணை: 26-04-1984 — 27-07-1984 (இரு தினங்களும் உட்பட)
3-ம் தவணை: 27-08-1984 — 05-12-1984 (இரு தினங்களும் உட்பட)

முஸ்லிம் பாடசாலைகள்

1-ம் தவணை: 23-01-1984 — 25-05-1984 (இரு தினங்களும் உட்பட)
2-ம் தவணை: 09-07-1984 — 31-08-1984 (இரு தினங்களும் உட்பட)
3-ம் தவணை: 10-09-1984 — 05-12-1984 (இரு தினங்களும் உட்பட)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைத் தவணைகள் பொதுவானவையாகும். உள்ளூர் விவசாய வேலைத்திட்டங்களோடு தொடர்புடைய விதைத்தல், அறுவடை செய்தல், தானியங்களைக்களஞ்சியப்படுத்துதல் மற்றும் அவற்றையொத்த காரணிகளுக்கு ஏற்றவிதமாக பிரதேசக் கல்விப் பணிப்பாளர், உப அலுவலகங்களுக்கு பொறுப்பான பிரதம கல்வி அதிகாரியின் முன் அனுமதியுடன் தவணைப் பாடசாலைகள் ஒழுங்கு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



நூற்றாண்டு நிறைவு காணும்
'இந்துபோர்ட்' இராசரத்தினம்

## அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறை தினங்கள்-1984

(மாற்றத்துக்குரியன)

ஜனவரி 15 தைப்பொங்கல் + x o
... 18 போயா
பெப்ரவரி 04 சுதந்திர தினம் + x o
... 16 போயா
... 29 மகா சிவராத்திரி + x
மார்ச் 16 போயா
ஏப்ரல் 12 தமிழ்-சிங்கள புதுவருடத்துக்கு முதல் நாள் + x o
... 13 தமிழ்-சிங்கள புதுவருடம் + x o
... 15 போயா
... 20 பெரிய வெள்ளி + x
மே 01 மேதினம் + x o
... 14 போயா
... 15 வெசாக் மறுதினம் + x o
... 22 தேசிய வீரர் தினம் + x o
ஜூன் 13 போயா
... 30 விசேஷ வங்கி விடுமுறை x
ஜூலை 01 றம்ழான் பெருநாள்
... 12 போயா
ஆக்ஸ்ட் 11 போயா
செப்டம்பர் 06 ஹஜ்ஜுப் பெருநாள் + x
... 09 போயா
அக்டோபர் 09 போயா
... 23 தீபாவளி + x
நவம்பர் 08 போயா
டிசம்பர் 06 முகம்மதுநபி பிறந்த தினம் + x o
... 07 போயா
... 25 நத்தார் பண்டிகை + x o
... 31 விசேஷ வங்கி விடுமுறை x

+ அரசாங்க x வங்கி o வர்த்தக

## பெரியார் தினங்கள்

ஜன. 01 இராமபதசுரர் / சி. வை. தாமோதரம்பிள்ளை
... 09 சேர் பொன் அருணாசலம்
... 22 சுவாமி ஞானப்பிரகாசர்
... 30 காந்திஜி அமரத்துவ தினம்
மே 27 ஸ்ரீ ஜவகர்லால் நேரு மறைவுதினம்
ஜூலை 4 சுவாமி விவேகானந்தர்
... 07 நாவலி சோமசுந்தரப் புலவர்
... 19 சுவாமி விபுலாநந்தர்
ஆக. 07 ரவீந்திரநாத் தாகூர்
... 16 இராமகிருஷ்ண பரமஹம்சர்
செப். 08 சுவாமி சிவானந்தர் ஜயந்தி
... 09 கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
... 11 சுப்பிரமணிய பாரதியார்
அக். 02 மகாத்மா காந்தி ஜயந்தி
நவ. 28 சேர். பொன். இராமநாதன் மறைவு தினம்

## குருபூஜை தினங்கள்

ஜன. 22 சண்டேசுரர்
பெப். 12 கண்ணப்பர்
... 19 திருவள்ளுவர்
மார்ச் 10 கச்சியப்பர்
... 20 காரைக்காலம்மையார்
ஏப்ரல் 09 செல்லப்பா சுவாமி
... 11 யோகர் சுவாமி
... 26 திருநாவுக்கரசர்
... 26 இலக்கை சுவாமிகள்
மே 12 உமாபதி சிவாசாரியார்
ஜூன் 03 சேக்கிழார்
... 14 திருஞானசம்பந்தர்
ஜூலை 03 மாணிக்கவாசகர்
ஆக. 04 சுந்தரமூர்த்திநாயனார்
செப். 04 குங்கிலியக்கலயர்
அக். 14 திருநாளைப்போவார்
நவம். 07 திருமூலர்
டிசம். 14 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## கிறிஸ்தவ திருநாட்கள்

ஜனவரி 01 இறைவனின் அன்னையாம் புனித மரியாள் பெருவிழா
... 08 ஆண்டவரின் ஞானஸ்நானம்
... 20 புனித செபஸ்தியார் திருநாள்
பெப். 02 காணிக்கை மாதா திருநாள்
... 11 லூர்து அன்னை விழா
மார்ச் 07 விபூதித் திருநாள்
... 19 புனித சூசையப்பர் பெருவிழா
... 24 கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு
ஏப்ரல் 15 குருத்து ஞாயிறு
... 19 ஆண்டவரின் இராவுணவு விழா
... 20 பெரிய வெள்ளி
... 22 உயிர்த்த ஞாயிறு
ஜூன் 10 பரிசுத்த ஆவி ஞாயிறு
... 24 கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தம் பெருவிழா
... 25 யேசுவின் திரு இருதயம் பெருவிழா
ஜூலை 02 மடுமாதா திருநாள்
ஆகஸ்ட் 15 புனித கன்னிமரியாள் விண்ணேற்பு
செப்டம். 08 தேவமாதா பிறந்த திருநாள்
... 14 திருச்சிலுவையின் மகிமை
அக்டோ. 01 குழந்தை யேசுவின்
... 21 மறை அறிவ
நவம்பர் 01 புனிதர்கள் தி
... 02 இறந்த விசு
... 25 கிறிஸ்து இ
டிசம்பர் 25 கிறிஸ்து பி

## இந்துக்களின் விசேஷ தினங்கள்


ஜனவரி 14 சுவர்க்கவாயில் ஏகாதசிவிரதம்
... 15 தைப்பொங்கல்
... 16 பட்டிப்பொங்கல்
... 19 தைப்பூசம்
பெப்ர 17 மாசி மகம்
... 29 மகா சிவராத்திரி
மார்ச் 17 பங்குனி உத்தரம்
ஏப்ரல் 04 சௌபாக்கிய கௌரி விரதம்
... 05 சக்தி கணபதி சதுர்த்திவிரதம்
... 10 ஸ்ரீ ராம நவமி
... 13 இரத்தாக்ஷி வருடப்பிறப்பு
... 15 சித்திரா பூரணை- சித்திரைச் சித்திரை
மே 07 அக்கினி நாளாரம்பம்
... 15 வைகாசி விசாகம்
... 28 அக்கினிநாள் முடிவு
ஜூன் 10 கூர்ம ஜயந்தி
ஜூலை 05 ஆனி உத்தர தரிசனம்
... 16 ஆடிப்பிறப்பு
... 28 ஆடி அமாவாசை
... 31 ஆடிப்பூரம் — நாகசதுர்த்தி
ஆகஸ்ட் 20 ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி
செப்டம்.04 ஆவணி மூலம்
... 11 மஹாளய பக்ஷாரம்பம்
... 15 மஹா பரணி
... 24 மஹாளயபக்ஷ முடிவு
... 25 நவராத்திரி விரதாரம்பம்
அக்டோ.03 சரஸ்வதி பூஜாரம்பம்
... 01 சரஸ்வதி பூஜை-மஹா நவமி
... 04 விஜயதசமி
... 23 தீபாவளி
... 25 ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்
... 29 ஸ்கந்தஷஷ்டி விரதம்
நவம்பர் 05 சாதுர்மாஸ்ய விரதபூர்த்தி
டிசம்பர் 06 திருக்கார்த்திகை விரதம் குமாராலயதீபம்
... 07 விஷ்ணுவாலயதீபம்-சர்வாலய தீபம்
... 09 விநாயக விரதாரம்பம்
... 28 விநாயக ஷஷ்டி விரதம்
... ... திருவெம்பாவைப் பூஜாரம்பம்

## இஸ்லாமிய பெருநாட்கள்

ஜூலை 01 றம்ழான் பெருநாள்
செப்டம். 06 ஹஜ்ஜுப் பெருநாள்
அக்டோ. 27 இஸ்லாமிய புது வருடம்
டிசம்பர் 06 முகம்மதுநபி பிறந்த தினம்

## அமாவாசை-பௌர்ணமி தினங்கள் - 1984

| | ● | ☼ |
|---|---|---|
| ஜனவரி | 02 | 18 |
| பெப்ரவரி | 01 | 16 |
| மார்ச் | 02 | 17 |
| ஏப்ரல் | 01 | 15 |
| ஏப்ரல் | 30 | — |
| மே | — | 14 |
| மே | 30 | — |
| ஜூன் | — | 13 |
| ஜூ | 28 | [illegible] |



# நாட்டறிப்பிலிருந்து..

★ ஜனவரி

1-ம் திகதி: சாதனை வீரன் ஆழிக்குமரன் 'பிலியட்ஸ் கியூ' தடியை உயர்த்தும் உலக சாதனையை யாழ்ப்பாண மண்ணில் நிலைநாட்டினர்.
2: குருநகர் இராணுவ முகாமில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் விசாரணை செய்யப்பட்டார்.
5: இன ஐக்கியத்தை பலப்படுத்த சர்வ கட்சிக்குழு அமைக்க வேண்டும் என்று அரச பாராளுமன்றக்குழு தீர்மானம். யாழ்ப்பாண இராணுவ பொறுப்பதிகாரி பிரிகேடியர் ரணதுங்க இடமாற்றம்.
10: ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு தள்ளுபடி.
11: மட்டக்களப்பு ரயில் வியாங்கொடையில் தடம் புரண்டது. நீர்வேலி வழக்கில் எதிரியான தங்கத்துரையின் மனைவிநவமணி (சென்னையைச் சேர்ந்தவர்) நீதிமன்றம் வந்திருந்தார்.
15: நாயன்மார்கட்டு பாபு குமார் சுட்டுக்கொலை.
16: சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டம் இயங்கத்தொடங்கியது.
17: ''சமூக விரோதிகளை ஒழிப்போம்'' என்ற தலைப்புடன் யாழ். நகரெங்கும் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.
18: தமிழக ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகியின் நாட்டிய நிகழ்ச்சி யாழ்நகரில் நடந்தது. மதகுருமார் மீதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
19; ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சிங்கள நடிகர் திரு. விஜயகுமாரணதுங்க விடுதலை வவனியா ஐ. தே. க. அமைப்பாளர் புலேந்திரன் சுட்டுக்கொலை.
20: மதகுருமாரை விடுதலை செய்யக்கோரி யாழ். பல்கலைக் கழகமாணவர் உண்ணாவிரதம்.
21: பாராளுமன்ற அனுமதி கோரி குட்டிமணி தாக்கல் செய்த மனு நிராகரிப்பு.
24: கிளிநொச்சியில் தென் இந்திய யாத்திரிகர் பயணம் செய்த பஸ் கோரவிபத்து. 3 பேர் பலி. 31 பேர் படுகாயம். குட்டிமணி எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார்,
26: பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி வரலாறு காணாதமாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

★ பெப்ரவரி

1-ம் திகதி: கட்டம் கட்டமாக 4 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் போராட்டம் ஆரம்பம்.
4: முதலாம் கட்ட போராட்டம் முடிந்து அடுத்த கட்ட மாணவர் உண்ணாவிரதத்தை தொடங்கினர். சுதந்திரதினத் கையெழுத்து யாழ். மாவட்டத்

16; தலைமன்னாரில் பயணிகளிடம் 50 ரூபா அறவிட அமைச்சரவை முடிவு.
17; வவனியா தமிழ் வித்தியாலய ஆய்வுகூடத்தில் கொள்ளை.
29; உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு.
31: பொத்துவில் எம். பி.யாக உதுமாலெப்பை நியமனம். செல்வா நினைவுதினம் அமைதியாக கொண்டாடப்பட்டது.

★ ஏப்ரல்

1-ம் திகதி: பனாகொடை இராணுவ முகாமிலிருந்து தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் தப்பிவிட்டதாக அறிவிப்பு.
2; யாழ். செயலகத்தில் குண்டு வெடிப்பு, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அ. வரதராஜப்பெருமாள் உட்பட 10 இளைஞர்கள் மட்டக்களப்பில் கைது.
3: கிளிநொச்சி ரயில் நிலையத்தில் கொள்ளை.
4: அமைச்சர் ஒருவர், 6 பிரதி அமைச்சர்கள் நியமனம்.
5: ஈழமக்கள் விடுதலை முன்னணியின் புரட்சிகர பாதயாத்திரையை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.
6: டாக்டர் ராஜசுந்தரம் கைது.
7: யாழ். மேல் நீதிமன்றத்தில் குண்டு வெடிப்பு. யாழ். நகரில் ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.
8: வல்வை பொலிஸ் நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம்.
9; டாக்டர் ஏபிரகாம் தமிழ்க் காங்கிரஸிலிருந்து ராஜினாமா.
10; குருநகர் இராணுவ முகாமில் திருமலை இளைஞர் நவரத்தினராசா மரணம். வவனியாவில் விவசாய இலாகா ஜீப் தீக்கிரை.
11: லெஸ்லி குணவர்த்தன காலமானார். பனாகொடையிலிருந்து தப்பிய மகேஸ்வரன் பேலியகொடையில் கைது.
18: ...

வாக்குச் சாவடிகளில் குண்டு வெடிப்பு. கந்தர்மடம் வாக்களிப்பு நிலையத்தில் துப்பாக்கிப் பிரயோகம். இராணுவ வீரர் பலி. ஆவேசமுற்ற படை வீரர் நகரில் அட்டகாசம். பழைய மார்க்கட் தீக்கிரை.
19: கூட்டணி ஆறு சபைகளிலும் வெற்றி. கந்தர்மடத்தில் 64 வீடுகள், 9 கார்கள், 3 மினிபஸ்கள் தீக்கிரை. மக்கள் அகதிகளாகி பாடசாலைகளில் தஞ்சம். புனர் நிர்மாண வேலைகளில் பல்கலைக்கழக மாணவர் அக்கறை.
22: மட்டுநகரில் ஜீப், கார் தீக்கிரை.
27: முல்லைத்தீவில் வன்னிப் பிரதேச தமிழாராய்ச்சி மகாநாடு, மண்டைதீவில் திருக்குறள் மகாநாடு ஆரம்பம்.
30: வல்வை இராணுவ முகாம் முன்னால் வான்சாரதி சபாரத்தினம் பழனிவேல் சுட்டுக் கொலை.
31: குருநகர் இராணுவ முகாமில் மரணமான நவரத்தினராசா மரணம் கொலை எனத் தீர்ப்பு.

★ ஜூன்

1-ம் திகதி: வவனியாவில் விமானப்படை வீரர் இருவர் சுட்டுக்கொலை. அன்றிரவு வவனியா சந்தை தீக்கிரை. பண்ணாகத்தைச்சேர்ந்த சிதம்பரநாதன், நெடுந்தீவைச் சேர்ந்த குமார் சூட்டுக்காயங்களுடன் வவனியா கோவிற்குளத்தில் கைது.
2; காந்தியத்தின் கோவிற்குளம் பண்ணை சின்னாபின்னப் படுத்தப்பட்டது.
3: ஆயுதப் படையினருக்கு பரவலான கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.
4: ஐ. தே. க அமைப்பாளர் திலகர் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து சுட்டுக்கொலை.
6: வவனியாவில் கைதாகி மரணமான சிதம்பரநாதனின்

5: காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் வெடி மருந்து கொள்ளை. யாழ். தபால் அத்தியட்சகர் காரியாலயம் சேதப்படுத்தப்பட்டது. எம்.பி. பதவியை 22-ல் ராஜினாமா செய்யப்போவதாக சாவகச்சேரி நவம் அறிவிப்பு.
8: செட்டிக்குளம் ரயில் நிலையத்தில் துப்பாக்கி இளைஞர் அட்டகாசம். பரபரப்பை ஏற்படுத்தியிருந்த ரியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கு எதிரி விடுதலை, மட்டுநகரில் 2 வாகனங்கள் தீக்கிரை.
9: சுதுமலை, சங்குவேலி, இணுவில் உபதபால் அலுவலகங்கள்சேதப்படுத்தப்பட்டன. வவனியா காந்தீயம் பண்ணையை அரசு சுவீகரித்தது.
10: வேலணை பெருந்தெருக்கள் திணைக்கள ஜீப் தீக்கிரை.
11: சுன்னாகம் மின்சார நிலையத்தில் காவலில் இருந்த கடற்படைவீரர் சுட்டுக்கொலை.
14: கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் கொள்ளை.
15: மீசாலையில் ராணுவவீரர் துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 இளைஞர் பலி. யாழ், மாவட்ட சபை தலைவர் திரு. எஸ். நடராசா ராஜினாமா. பயங்கரவாத ஒழிப்புபற்றி ஆராய வட்டமேசை மாநாட்டுக்கு ஜனாதிபதி அழைப்பு.
16: மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று 'அமிர்' அறிவிப்பு.
20: செய்தித்தணிக்கை அமுலானது.
21: ஜனாதிபதி கூட்டிய வட்டமேசை மாநாடு நடந்தது. இ. தொ. கா. மட்டுமே கலந்து கொண்டது. 27க்கு மாநாடு ஒத்திவைப்பு. இலங்கை உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாக இந்திய தூதுவரிடம் அமைச்சர் ஜலுப் ஹமீட் கண்டனம்.

3: வன்செயல் சம்பவத்தைத் தொடர்ந்து 19 பேர் கைது. ரோகண விஜேவீர வாசுதேவ நாணயக்கார தலைமறைவு.
5: பிரிவினைக்கு எதிராக பதவிப் பிரமாணம் செய்யும் அரசியலமைப்பின் 6-வது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. இலங்கைப் படுகொலையை எதிர்த்து தி.மு.க. ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியது.
7: மதுரையிலிருந்து தியாகப் பயணம் திரு. நெடுமாறன் தலைமையில் தொடங்கியது.
10: தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியும் செயலாளர் அன்பழகனும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தனர். ஜனாதிபதியின் விசேட தூதுவர் எச். டபிள்யு. ஜெயவர்த்தன புதுடில்லிபயணம். கிளிநொச்சி தனிமாவட்டமாக்கப்பட்டது.
12: ஐ.தே.க. அமைப்பாளர் திரு. ஜி. இராஜகுரியரும் அவரது மகனும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.
13: அமிர்தலிங்கம் சென்னை பயணம்.
14: இந்திய சுதந்திரதினத்தை முன்னிட்டு தமிழக ராஜ்பவனில் வருடாவருடம் நடாத்தப்படும் விருந்து இலங்கை சம்பவங்களால் ரத்து செய்யப்பட்டது. எம். ஜி. ஆருடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது பிரதமர் இந்திராவின் அவசர அழைப்பின் பேரில் அமிர் புதுடில்லி பயனம். இந்திராவை சந்தித்தார். ஓப்ரோய் தேவன் சுட்டுக் கொலை.
15: கொழும்பிலிருந்து 31,000 அகதிகள் அனுப்பப்பட்டதாக அரசு அறிவித்தது.

## ஜூலைச் சம்பவங்கள்

23ம் திகதி : திருநெல்வேலியில் 13 இராணுவ வீரர்கள் கொலைசெய்யப்பட்டனர்.
24: திருநெல்வேலியில் இராணுவ வீரர் கொலையுண்ட சுற்றுடலில் பலர் மரணமானார்கள் மானிப்பாய் சம்பவத்தில் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த 7 பேர் மரணம். மாதகல், சங்கானைச்சந்தை பண்டத்தரிப்பு. சண்டிலிப்பாய் உட்பட பல இடங்களில் மொத்தம் 54 பேர் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இரவு கொழும்பு கனத்தையில் 13 ராணுவ வீரர்களின் இறுதிச் சடங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கனத்தை மயானத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழர்களின் சொத்துக்கள் தீயிடப்பட்டன.
25: கொழும்பில் கலவரம் மூண்டது நகரெங்கும் தமிழர்களுடையசொத்துக்கள் கொள்ளையடித்து தீயிடப்பட்டன பலர் மாண்டனர். மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர் வெலிக்கடைக்...

# ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் கறை படிந்த நாட்கள்

22: யாழ். மட்டுநகர், திருமலையிலும் ஊரடங்கு அமுல்.
23: தனிநாடு கோரும் கட்சிகளுடன் பேசமாட்டேன் என ஜனாதிபதி தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தார்.
25: இந்தியப்பிரதமரின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி இலங்கை வந்தார்.
26: திரு. பார்த்தசாரதி ஜனாதிபதியுடன் முதல் தடவையாகப் பேச்சு நடத்தினர். திரு. பார்த்தசாரதியின் அழைப்பின் பேரில் அமிர் கொழும்பு திரும்பினர்.
27: ஒருகோடி கையெழுத்து மனுவை ஐ. நாவுக்கு அனுப்பப்போவதாக கருணாநிதி அறிவிப்பு.
28: பார்த்தசாரதி கூட்டணித் தலைவர்கள், அரசின் முக்கிய அமைச்சர்கள் அரசியல் தலைவர்களைச் சந்தித்தார்.
29: பார்த்தசாரதி ஜனாதிபதியை இரண்டாவது தடவையாகச்சந்தித்தார். சபாநாயகர் ஜனாப் பக்கீர் மாக்கார் ராஜினாமா.
30: பார்த்தசாரதி தாயகம் திரும்பினர்.

★ செப்டம்பர்

1-ம் திகதி: திரு. ஜி. பார்த்தசாரதி தாயகம் புறப்பட்டார்.
2: மட்டக்களப்பு மாநகரஉறுப்பினர் திரு. மாலாராமச் சந்திரன் சுட்டுக் கொலை. யாழ். தபால் நிலையத்தில் கொள்ளை.
3: கலவரங்களின் பின்னர் ஜனாதிபதியை முதற்தடவையாக சந்தித்த அமிர் சென்னை பயணமானர்.
6: புதிய சபாநாயகராக ஈ. எல். சேனநாயக்கா தெரிவு செய்யப்பட்டார். கிளிநொச்சி நீதிமன்றத்தில் 30 துப்பாக்கிகள் கொள்ளை.
7: இராமேஸ்வரத்திலிருந்து 35 இலங்கையருடன் புறப்பட்ட படகு விபத்துக்குள்ளாகியது. ஒன்பது போர் பலியானார்கள். அரசு ஊழியர் வேலைக்குத்திரும்ப ஒருவார காலக்கெடு விதிக்கப்பட்டது.
8: சென்னையிலிருந்து திரு. அமிர்தலிங்கம் லண்டன் பயணமானர். புறக்கோட்டை தீ விபத்தில் 125 கடைகள் எரிந்தன.

★ அக்டோபர்

2: ம் திகதி: திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக பதவி ஏற்றார்.
3: மட்டக்களப்பு பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தகர்க்கும் கருவி கொள்ளை.
7: திருநெல்வேலியில் கொலையுண்ட 13 இராணுவவீரர்களின் மரண விசாரணை நடைபெற்றது. '15 இராணுவ வீரர்களும் குருநகர் முகாம் நோக்கி சென்று கொண்டிருந்த போது ட்ரக் வண்டி மீது குண்டு வீசப்பட்டது. சாரதி வண்டியை நிறுத்தியதும் சரமாரியான துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன'' என்று உயிர் தப்பிய வீரர் உபாலிபெரேரா சாட்சியமளித்தார். பிரேத விடுமுறை 6 வாரத்திலிருந்து 12 வாரமாக அதிகரிக்கப்பட்டது.
8; மாவை சேனாதிராசா கைது செய்யப்பட்டார். அமிரின் மகன் ரவியின் கடிதம் வெளியிடப்பட்டது.
12: பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் தற்காலிக இடமாற்றம் 24 மணிநேர அவகாசத்தில் ரத்து செய்யப்பட்டது.
13: யாழ். தபால் நிலயத்தில் மூன்று லட்சம் ரூபாகொள்ளை.
13: ஒருகோடி கையெழுத்து மனு ஐ. நா. விடம் சமர்ப்பிக்கப்பட்டது.
15: அமைச்சர் இராசதுரையின் செயலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம்.

9: ஜனாதிபதி — பார்த்தசாரதி சந்திப்பு விபரம் வெளியிடப்பட்டது. மாகாண சபை யோசனை தெரிவிக்கப்பட்டது. தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு திரும்புவதில்லை என்று தமிழ் மாணவர் முடிவு.
19: திருமலை இடைத் தேர்தல் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானது. ஜி. பார்த்தசாரதி தாயகம் திரும்பினர்.
14: தொண்டமான் தமிழகம் பயணமானர்.
16: சர்வோதயத் தலைவர் கலாநிதி ஆரியரத்ன யாழ். விஜயம். ஐ.தே.க. அரசின் ஏழாவது பட்ஜட் சமர்பிக்கப்பட்டது.
17: கோவை மகேசன் விடுதலை செய்யப்பட்டார்.
20: கூட்டணித் தலைவர்கள் பார்த்தசாரதி சந்திப்பு. ஜனாதிபதியின் மாநில சபை யோசனை தெரிவிக்கப்பட்டது.
21: ஜனாதிபதி புதுடில்லி பயணமானர். பார்த்தசாரதி - ஜனாதிபதி சந்திக்கனர்.
22: ஜனாதிபதி இந்தியப்பிரதமரை சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாணும் யோசனை பற்றி பேசினர்.
23: ஜனாதிபதிக்கு கறுப்புக் கொடி காட்ட முயன்ற தி.மு.க. எம். பிக்கள் கைது. விடுதலை.
24: இடம் பெயர்ந்த ஆண் ஆசிரியர்கள் உடன் திரும்ப வேண்டும் என்று தமிழர் ஆசிரியர் சங்கம் - கல்வி அமைச்சர் சந்திப்பில் முடிவு.
26: பிரபல வானொலி அறிவிப்பாளர் திரு. என். மயில்வாகனன் காலமானர்.
30: ஜனாதிபதி — இந்தியப் பிரதமர் இரண்டாவது தடவை சந்திப்பு. அமைச்சர் தேவநாயகம் வீட்டில் காவலிலிருந்த பொலிசார் சுட்டுக் கொலை.

★ டிசம்பர்

1-ம் திகதி புதுடில்லியிலிருந்து ஜனாதிபதி நாடு திரும்பினர்,
2: இந்தியப்பிரதமர் திருமதி காந்தியை திரு. அமிர்தலிங்கம்

# எம். பி.க்கள் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு; தமிழ் மாணவர் கல்வி பாதிப்பு; இனப்படுகொலை!

15: அமைச்சர் தொண்டமான் உமாமகேஸ்வரன் சந்திப்பு.

சந்தித்துப் பேசினர். இலங்கைத் தமிழர் ஆதரவு மாநாடு.
3: சர்வகட்சி மாநாடு குறித்து ஜனாதிபதியை திரு. குமார் ...

# பக்ஷகாப்பு; தமிழ் மாணவர் கல்வி பாதிப்பு; இனப்படுகொலை!

★ பெப்ரவரி

1-ம் திகதி: கட்டம் கட்டமாக 4 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் போராட்டம் ஆரம்பம்.

4: முதலாம் கட்ட போராட்டம் முடிந்து அடுத்த கட்ட மாணவர் உண்ணாவிரதத்தை தொடங்கினர். சுதந்திரதினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

7: மாணவரின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது. தடுப்புக்காவலில் இருந்த மதகுருமார் நிமாண்டில் வைக்கப்பட்டனர்.

8: அராலியில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் பலத்தகாயமடைந்தனர்.

10: அமைச்சர் ஒருவர், பிரதி அமைச்சர்கள் 6 பேர், 10 எம். பி.க்கள் ராஜினமா.

12: கோண்டாவிலில் இளைஞர் நாதன் சுட்டுக்கொலை.

13: பிரபல தொழிலதிபர் உபாலி விஜயவர்த்தனவின் ஜெட் விமானம் 6 பேருடன் மறைவு.

16: யாழ் - கொழும்பு துரித கடுகதி ரயில் சேவை ஆரம்பம். பொத்துவில் எம். பி. ஜலால்தீனின் குடியுரிமையை நீக்க ஜனதிபதி கமிஷன் சிபார்சு.

18: பருத்தித்துறையில் இரு பொலிசார் சுட்டுக்கொலை.

21: பருத்தித்துறையில் பொலிசார் சுட்டதில் இடத்தில் 4 கடைகள் தீப்பற்றிஎரிந்தன.

22: கோப்பாய் எம்.பி. திரு. எம்.ஆலாலசுந்தரம்மீது இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம்.

24: நீர்வேலி கொள்ளை - கொலை வழக்கில் எதிரிகள் குட்டிமணி, தங்கத்துரை, தேவன், சிவபாதம், நடேசதாசன், சுந்தரம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு.

27: நீர்வேலி வழக்கில் எதிரிகளுக்கு ஆயுட் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. திருநெல்வேலியில் 2 பஸ் தீக்கிரை. வட்டுக்கோட்டை எம்.பி.யாக கலாநிதி நீலன் திருச்செல்வம் நியமனம்.

★ மார்ச்

2-ம் திகதி: பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் விலை உயர்வு.

4: உமையாள்புரத்தில் ராணுவத்தினர்மீது இளைஞர்கோஷ்டி துப்பாக்கிப் பிரயோகம்.

5: மட்டக்களப்பில் கூடிய கூட்டணி பொதுச்சபை 'பொலிட்பீரோ' அமைக்க முடிவு.

6: யாழ். சிறையிலிருந்து 6 கைதிகள் தப்பி ஓ...

...மீது துப்பாக்கிப் பிரயோகம்.

9: டாக்டர் ஏமிரகாம் தமிழ்க் காங்கிரஸிலிருந்து ராஜினமா.

10: குருநகர் இராணுவ முகாமில் திருமலை இளைஞர் நவரத்தினராசா மரணம். வவனியாவில் விவசாய இலாகா ஜீப் தீக்கிரை.

11: லெஸ்லி குணவர்த்தன காலமானர். பனுகொடையிலிருந்து தப்பிய மகேஸ்வரன் பேலியகொடையில் கைது.

18: சகல உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கும் வேட்பு மனு தாக்கலானது. தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தீவிரவாத இளைஞர் கோரிக்கை.

22: பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி கூட்டணி உண்ணாவிரதம்.

29: பருத்தித்துறை ஐ.தே.க. அமைப்பாளர் இரத்தினசிங்கம் ஆதரவாளர் ஒருவரும் சுட்டுக்கொலை.

30: சாவகச்சேரி நகரசபை ஐ.தே.க. வேட்பாளர் அனைவரும் சுட்டுக்காக வாபஸ்.

★ மே

2-ம் திகதி: வாக்காளர் அட்டைகள் தபால் ஊழியரிடம் இருந்து துப்பாக்கி முனையில் கொள்ளை.

5: காவலில் வைக்கப்பட்டிருந்த ஆறுமுகம் சேயோன் காலஞ்சென்ற தனது தந்தைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பலத்த பாதுகாப்புடன் பண்ணைகம் கொண்டுவரப்பட்டார்.

8: ஐந்து சந்தியில் நடைபெற்ற கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கிச்சூடு. அமிர்தலிங்கத்தின் கார் கடத்தப்பட்டது.

10: யாழ். மாநகரசபை கூட்டணி முதல் வேட்பாளர் எஸ். நாகராசா மீண்டும் வாபஸ்.

11: சகல உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் இருந்தும் தமிழ்க் காங்கிரஸ் வாபஸ். தமிழ் மக்களை வாக்களிக்க வேண்டாம் எனவும் கோரிக்கை.

12: சகல இடங்களிலும் போட்டியிட கூட்டணி பொதுச்சபை கூடி முடிவு. பேராதனை பல்கலைக்கழகத்தில் அசம்பாவிதத்தைத் தொடர்ந்து தமிழ் மாணவர்கள் யாழ். திரும்பினர்.

15: பருத்தித்துறையில் கூட்டணி வேட்பாளர் கூட்டாக வாபஸ், யாழ். மாநகரசபை வேட்பாளர்களில் 21 பேர் வாபஸ்.

16: தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தமிழீழ ராணுவம் கோரிக்கை. 'அமிரி'ன் மகன் பிரதன் வெள்ளவத்தையில் கைதாகி விடுதலை.

17: அவசரகாலச்சட்டம் ...

...வவனியா கோவிற்குளத்தில் கைது.

2: காந்தியத்தின் கோவிற்குளம் பண்ணை சின்னபின்னப் படுத்தப்பட்டது.

3: ஆயுதப் படையினருக்கு பரவலான கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

4: ஐ.தே.க அமைப்பாளர் திலகர் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து சுட்டுக்கொலை.

6: வவனியாவில் கைதாகி மரணமான சிதம்பரநாதனின் இறுதிக்கிரியைகள் பண்ணைத் நடந்தன. அமைச்சர் எஸ்.பி. ஹேரத் காலமானர்.

7: 90 இராணுவ வீரர்களை கைது செய்ய தலைமையகம் உத்தரவு.

8: தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார்பொன்னம்பலத்தின் கொழும்பு வீட்டுக்கு குண்டுவீச்சு. திருமலையில் கலவரம். ஊரடங்கு அமுல்.

10: பனுகொடை ஜமீல் இளைஞர்கள் சிறைச்சாலைக்கு மாற்றம்.

11, ஜனதிபதி எதிர்ப்பு பயனமாணர். திருமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன் வீட்டுக்கு குண்டு வீச்சு. தொடர்ந்து கலவரம். நீதியரசர்கள் மூவரின் வீடுகள் முன்பாக ஆர்ப்பாட்டம்.

16. நல்லூரில் இராணுவம் சுட்டதில் இளைஞர் கே. யோகராசா பலி, 3 பேருடன் பஸ். நகரசபை கூடியது. யாழ். மாநகர ஏனைய 3 சபைகளும் கூடவில்லை.

18? தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுமாறு அரசை வற்புறுத்த கூட்டணி பொதுச்சபை முடிவு.

20: இந்திய இளைஞர் சாஜகான் இலங்கை தமிழர்படும் இன்னல்களைக் கண்டித்து தனக்குத் தானே தீமூட்டினர்.

23: பருத்தித்துறை நகரசபை அலுவலகத்துக்கு குண்டுவீச்சு.

26: யாழ்., வவனியா விஜயம் செய்த பிரிட்டனின் பத்திரிகை நிருபர் நாடுகடத்தப்பட்டார்.

29: விமானக் கடத்தல்காரர் சேபாலவுக்கு ஆயுட்சிறை. திருமலையில் தொடரும் கலவரம். ஊரடங்கு தொடர்ந்து அமுல்.

★ ஜூலை

1-ம் திகதி: யாழ். நகரில் பூரண ஹர்த்தால். கோண்டாவிலில் ரயில் தீக்கிரை. ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்த தமிழீழ விடுதலை அணி தலைவர் டாக்டர் தர்மலிங்கம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் கைது. சுதந்திரன், சுற்றறிக்கை நிலையம் ஸீல் வைக்கப்பட்டது.

3: பருத்தித்துறை பெண்கள் கல்லூரியில் துப்பாக்கி முனையில் 'அகிட்' கொள்ளை. கிராமப்புற பஸ்சேவை ரத்து. திருமலை சம்பவத்தைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் பரீட்சைகளை பகிஷ்கரித்தனர்,

உட்பட பல இடங்களில் மொத்தம் 54 பேர் மரணமானர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இரவு கொழும்பு கனத்தையில் 13 ராணுவ வீரர்களின் இறுதிச் சடங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது கனத்தை மயானத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழர்களின் சொத்துக்கள் தீயிடப்பட்டன.

25: கொழும்பில் கலவரம் மூண்டது நகரெங்கும் தமிழர்களுடையசொத்துக்கள் கொள்ளையடித்து தீயிடப்பட்டன பலர் மாண்டனர். மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர் வெலிக்கடைச் சிறையில் தமிழ் கைதிகள் குட்டிமணி, தங்கத்துரை, உட்பட 37 கைதிகள் கொலை செய்யப்பட்டனர்

26: யாழ் மாவட்டத்தில் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன யாழ் சிறைச்சாலைச் சம்பவத்தில் 2 தமிழ்க்கைதிகள் பலியாகினர்.

27: இலங்கையில் தமிழர் கொல்லப்பட்டதைக் கண்டித்து தி மு. க சென்னையில் பேரணி நடத்தியது.

28: வெலிக்கடைச் சிறையில் மேலும் 17 தமிழ்க் கைதிகள் கொலைசெய்யப்பட்டனர்.

29: பாரதப்பிரதமர் திருமதி இந்திரா ஜனதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கை நிலைபற்றி அறிந்தார். இந்திய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் கொழும்பு வந்தார். கொழும்பிலிருந்து முதலாவது அகதிகள் கப்பல் புறப்பட்டது.

30: இரண்டாவது கப்பலும் புறப்பட்டது.

31: முதலாவது அகதிகள் கப்பல் காங்கேசன் துறைமுகத்தை வந்தடைந்தது.

தமிழக முதல்வர் தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழு இலங்கைப் பிரச்னை குறித்து இந்தியப்பிரதமருடன் பேசியது.

ஆறுநாட்கள் இடம்பெற்ற கலவரத்தில் எத்தனை பேர் மாண்டார்கள் என்பது சரியாக தெரியவில்லை. அரச சார்பில் முன்னுக்கு பின் முரணை தகவல்களே வெளியாகின.

323 கொலைகள், 1494 தீ வைப்பு சம்பவங்கள், 195 கொள்ளை, கற்பழிப்பு 372, அகதிகளாகி முகாம்களில் சேர்க்கப்பட்டோர் 80,000 பேர். இத்தகவலை பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆனல் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது. "120 தொழிற்சாலைகள், 1500 வர்த்தக நிலையங்கள், 6500 வீடுகள், 1800 வாகனங்கள் தீயிடப்பட்டன" என்ருர்,

22: இலங்கையின் குற்றச்சாட்டுக்கு இந்தியா மறுப்பு.

23: கூட்டணி மாநில மாநாடு மன்னரில் ஆரம்பம். எம். பி.க்கள் பதவியை ராஜினமா செய்வதென முடிவு.

★ ஆகஸ்ட்

2-ம் திகதி: தமிழகம் முழுவதும் இலங்கை சம்பவங்களை கண்டித்து ஹர்த்தால். மத்திய மாநில அரசுகள் பங்கு கொண்டன.

16: அமிர் — இந்திரா இரண்டாவது தடவையாக சந்திப்பு.

திரு. அமிரின் கோரிக்கையின் பேரில் தியாகப்பயணத்தை கடலில் வைத்து நெடுமாறன் கைவிட்டார்.

20: தமிழக முதல்வர் எம். ஜி. ஆருடனும் கருணநிதியுடனும் திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தை. ஜனதிபதியின் தூதுவர் எச். டபிள்யு. ஜெயவர்த்தன தென் மேற்காசிய நாடுகள் விஜயம்.

...நீதிமன்றத்தில் 30 துப்பாக்கிகள் கொள்ளை.

7: இராமேஸ்வரத்திலிருந்து 35 இலங்கையருடன் புறப்பட்ட படகு விபத்துக்குள்ளாகியது. ஒன்பது பேர் பலியானர்கள். அரச ஊழியர் வேலைக்குத்திரும்ப ஒருவார காலக்கெடு விதிக்கப்பட்டது.

8: சென்னையிலிருந்து திரு. அமிர்தலிங்கம் லண்டன் பயணமானர். புறக்கோட்டை தீ விபத்தில் 125 கடைகள் எரிந்தன.

10: சரியான முறையில் சத்தியப்பிரமாணம் எடுக்காததால் 22 நீதியரசர்கள் பதவி இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

12: முதல் நாள் கைதான இரு வாலிபர் மறு நாள் மரணமானதாக வவனியா எம்.பி. ஜனதிபதிக்கு தந்தி.

13: இலங்கை ஜனதிபதியின் கோரிக்கையின் பேரில் பார்த்தசாரதியின் இரண்டாவது விஜயமொத்தி வைக்கப்பட்டது. திருமலை மாவட்டசபைத் தலைவர் மு. தங்கத்துரை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

14: காங்கேசனில் 'வெல்டிங்' யந்திரம் கொள்ளை

15: பதவி இழந்த நீதியரசர்கள் மீண்டும் நியமனம். நல்லூர் எம்.பி. கிளிநொச்சி எம்.பி. தமிழகம் பயணம்.

17: ஒருகோடி கையெழுத்து மனு ஐநாவுக்கு தபாலில் அனுப்பப்பட்டது.

19: வவனியா நகரசபைக் கட்டிடம் ஆயுதப்படையினருக்கு சுவீகரிப்பு.

20: கல்குடா வடமுனையில் சிங்களக்குடியேற்றம். தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேற்றம்.

24. மட்டக்களப்பு சிறைச்சாலை உடைக்கப்பட்டு 41 அரசியல் கைதிகள் உட்பட 27 கைதிகள் தப்பினர். கல்குடா குடியேற்றத்தை கண்டித்து மாவட்ட அமைச்சர் ஜனுப் மஜீத் ராஜினமா.

26: மட்டக்களப்பு சிறையை கைதிகளே உடைத்ததாக நீதி அமைச்சு அறிவிப்பு. கைதிகள் இந்தியக் கரையை அடைந்துவிட்டதாக [illegible] தகவல்.

27: தம்பிலுவில் இலங்கை வங்கி உடைத்து துப்பாக்கிகள் கொள்ளை.

25: வவனியாவில் பொலிஸ் அதிபர் அலுவலகம் முன் குண்டு வெடிப்பு.

15: அமைச்சர் தொண்டமான் உமாமகேஸ்வரன் சந்திப்பு.

17: மட்டக்களப்பு கச்சேரியில் 86 துப்பாக்கிகள் கொள்ளை. யாழ் மாவட்டத்தில் முதல் தடவையாக மானிப்பாய் எம்.பி. பதவீ இழப்பு.

19: ஜனதிபதி கூட்டிய இரண்டாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. மக்கள் ஐக்கிய முன்னணி மட்டுமே கலந்து கொண்டது

20: கூட்டணி 'பொலிட்பீரோ' சென்னையில் கூடியது.

21: அமிரின் மகன் ரவியின் கடிதத்துடன் கைதான இளைஞர் வள்ளுவன் விடுதலை. மட்டு. சிறை உடைப்புக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உரிமைகோரியது.

22: திருமலை இடைத் தேர்தலைப்பகிஷ்கரிக்க கூட்டணிக் கிளை முடிவு.

24: யாழ் பல்கலைக்கழக மாணவர் வீதிகளில் ஆர்ப்பாட்டம்.

25: யாழ். வைத்தியசாலையில் 25 டாக்டர்கள் இரத்த தானம் வழங்கினர். ஜூலை சம்பவங்களுக்கு தமிழக சட்ட சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது.

27: அளவெட்டியில் அடகு கடையில் மூன்று லட்சம் ரூபா பெறுமதி நகைகள் கொள்ளை!

30: யாழ் பாஸ்போட் அலுவலகம் மூடப்பட்டது.

★ நவம்பர்

1: ம் நாள் வண. சிங்கராயர் பலத்த பாதுகாப்புடன் தாயை சந்தித்து திரும்பினர்.

4: ம் திகதி டாக்டர் தர்மலிங்கம் யாழ் நகரில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

5: 'தமிழ் ஈழக் குரல்' என்ற வானெலி சேவையை திரு. உமாமகேஸ்வரன் தலைமையிலான ஈழமக்கள் விடுதலை முன்னணி ஆரம்பித்தது.

6: திரு. பார்த்தசாரதி மீண்டும் கொழும்பு வந்தார். ஜனதிபதியை சந்தித்தார்.

8: புதிய எதிர்க்கட்சித்தலைவராக திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவானர்.

சந்தித்துப் பேசினர். இலங்கைத் தமிழர் ஆதரவு மாநாடு.

3: சர்வகட்சி மாநாடு குறித்து ஜனதிபதியை திரு. குமார் பொன்னம்பலம் சந்தித்தார்.

5: திருகோணமலை இடைத் தேர்தலை ஜனதிபதி ஒத்தி வைத்தார். சீதுவ எண்ணை கொழுப்புக் கூட்டுத்தாபன களஞ்சிய அறை தீ விபத்தில் சாம்பலானது.

6: சர்வோதயத்தலைவர் ஆரியரத்ன ஏற்பாடு செய்த பாதயாத்திரை கதிர்காமத்தில் ஆரம்பமானது. இரவு திசமகாராமாவில் ஜனதிபதியின் கோரிக்கையின் பேரில் பாதயாத்திரை கைவிடப்பட்டது.

8: மட்டக்களப்பு பல்கலைக் கல்லூரியில் கொள்ளை. பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன.

10: ஐ.தே.க. 29-வது வருடாந்த மாநாடு நடைபெற்றது. சிங்கள மக்களின் சம்மதத்துடனேயே இனப்பிரச்னை தீர்க்கப்படும் என்று ஜனதிபதி அறிவித்தார்.

13. பம்பலப்பிட்டியிலுள்ள 'தோமாஸ்குக்' நிறுவனத்தில் இருபது லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

14: தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக கல்வியை வடக்கு கிழக்கில் தொடர வற்புறுத்தி யாழ். மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழர் பிரச்னை தீர்வுக்கான பூர்வாங்க மாநாடு 21-ம் திகதி நடைபெறுமென அறிவக்கப்பட்டது.

15: கூட்டணி, நவ ச. ச க, ம. வி. மு., தவிர்ந்த 9 அரசியல் கட்சிளுக்கு அழைப்புவிடுக்கப் பட்டது.

17: திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா யூகோஸ்லாவியாவிலிருந்து நாடு திரும்பினர்.

21: அனைத்துக்கட்சி பூர்வாங்க மாநாடு நடந்தது. அடுத்த மாநாட்டை ஜனவரி 10-ல் நடத்துவதென்றும் கூட்டணியை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அழைக்கப்பட்ட கட்சிகளில் தமிழரசு தவிர்ந்த அனைத்து கட்சிகளும் கலந்து கொண்டன. நாட்டில் பலத்த மழை பெய்தது. மட்டக்களப்பு, வவனியா, மன்னர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

தொகுப்பு:
எஸ். குஹநாதன்

# அணு ஆயுத பெருக்கம் மூலம் யுத்த விளிம்புக்கு கடத்திச் சென்ற ஆண்டு!

## ஜனவரி

2-ம் திகதி: இந்துமா சமுத்திர வலயத்தை உள்ளடக்கிய அமெரிக்காவின் புதிய இராணுவத் தளம் செயற்படத் தொடங்கியது.

4-ம்: இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகம், திரிபுராவில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது. நடிகர் ராமராவ் ஆந்திராவில் வெற்றி பெற்ருர்.

8-ம்: போக்லண்ட் தீவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் திடீர் விஜயம்.

14-ம்: சோவியத் அதிபர் ஆந்ரபோவ் பாலஸ்தீன தலைவர் அரபாத் சந்திப்பு கிரெம்ளினில்.

16-ம்: துருக்கியில் போயிங் விமான விபத்து. 14 பேர் பலியாகினர்.

25-ம்: சீனத் தலைவர் மாசேதுங்கின் மனைவிக்கு ஆயுட் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

26-ம்: ஜப்பான் முன்னுள் பிரதமர் தனக்காமீது லஞ்சக் குற்றச்சாட்டு தாக்கலானது.

## பெப்ரவரி

4-ம்: லெபனுனிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றக் கோரும் அவசர வேண்டுகோளை அணிசேரா நாடுகள் சார்பில் இந்தியப் பிரதமர் திருமதி காந்தி விடுத்தார்.

10-ம்: இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஷெரான் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

12-ம்: பெகின் அரசை ராஜினுமா செய்யுமாறு கோரி ஆயிரக்கணக்கான மக்கள இஸ்ரேல் வீதிகளில் ஆர்ப்பாட்டம்.

14-ம்: சர்ச்சைக்குரிய அஸாம் மாநிலத்தில் தேர்தல் நடைபெற்றது

16-ம்; தென் அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 40 பேர் மாண்டனர்.

20-ம்: லிபிய விமானம் 160 பயணிகளுடன் கடத்தப்பட்டு மோல்டா விமான நிலயத்தில் தரையிறங்கியது.

23-ம்: லிபிய விமானப் பயணிகள் மீட்கப்பட்டனர்.

24-ம்: சென்னையில் இலங்கை மலையகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடந்தது.

## மார்ச்

7-ம்: புதுடில்லியில் அணிசேரா இயக்க 7வது உச்சி மாநாடு ஆரம்பமாகியது.

12-ம்: புதுடில்லி மாநாடு முடிந்தது.

சிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் ஜோசுவா என்கோமா லண்டனில் புகலிடம் கோரினர்.

14-ம்: எகிப்தில் 3 அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

27-ம்; இந்திராவின் மருமகள் மேனகா சஞ்சாய் காந்தி புதிய கட்சி ஆரம்பித்தார்.

## ஏப்ரல்

6-ம்: பம்பாயில் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து 7 பேர் மாண்டனர்.

11-ம்: இந்திய ராணுவ செலவுக்கு 967 கோடி ரூபா செலவிற்கு பாராளுமன்றம் அனுமதியளித்தது.

15-ம்: காபூல் விமான நிலைத்தில் விமானமொன்று விழுந்து 19 பேர் பலியாகினர்.

## மே

3-ம்: இந்திய அஸாம் மாநில வன்முறை சம்பவங்களில் 1474 பேர் பலியானதாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

4-ம்: பிலிப்பைன்ஸ்ஸில் 3 கத்தோலிக்க மதகுருமார் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது.

ஈரானிலிருந்து 18 சோவியத் ராஜதந்திரிகள் வெளியேற்றப்பட்டனர்.

14-ம்; கடந்த ஆண்டு வெளியேறிய அரபாத் மீண்டும் லெபனுன் வந்தார்.

17-ம்: லிபியாவிலிருந்து லெபனுன் தூதுவர் வெளியேற்றப்பட்டார்.

19-ம்: லெபனுனை ஆதரிக்க சவூதி அரேபியா முடிவு செய்தது.

20-ம்: தென்னுபிரிக்க விமான நிலையத்தில் குண்டு வெடித்து 14 பேர் பலி.

23-ம்: மொசாம்பிக் மீது தென்னுபிரிக்க யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தின.

25-ம்: நைல்நதியில் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளானதில் 300 பேர் மாண்டனர்.

சோவியத்திலிருந்து 3 ஈரான் ராஜதந்திரிகள் வெளியேற்றம். சென்னையில் உமாமகேஸ்வரனை பிணையில் விடக்கோரும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

26-ம்: கமலஹாசன் சிறந்த நடிகராக தெரிவு செய்யப்பட்டார்.

29-ம்: எந்த ராணுவத் தாக்குதலையும் முறியடிக்க வில்லியம் பேர்க்கில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, இத்தாலி. ஜப்பான், மேஜெர்மனி ஆகிய நாடுகள் மாநாடு கூட்டி உடன்பாடு செய்தன.

## ஜூன்

6-ம்: 'அங்டாட்' மாநாடு பெல்கிரேட்டில் இன்று ஆரம்பம். பாலஸ்தீன தலைவர் அரபாத் புதுடில்லி விஜயம் செய்தார்.

9-ம்: உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி லண்டனில் ஆரம்பமானது. பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

11-ம்: பிரதமர் தட்சரின் கன்சர்வேட்டிவ் கட்சி மாபெரும் வெற்றி பெற்றது. இந்தியப் பிரதர் டென்மார்க் பயணமாளுர்

14-ம்: சிரியா, இஸ்ரேல் துருப்புக்களை வெளியேற்றக் கோரும் அமெரிக்க உடன்படிக்கையை லெபனுன் பாராளுமன்றம் அங்கீகரித்தது.

18-ம்; பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர்தமது தாய்நாடான போலந்துக்கு விஜயம் செய்தார்.

22-ம்; புதுச்சேரியில் தி.மு.க. இ. காங்கிரஸ் பிளவுபட்டதால் ராஷ்திரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

25-ம்: ஆறுமாத பாதயாத்திரையை ஜனதா தலைவர் சந்திரசேகர் புதுடில்லியில் முடித்தார். உலக கிண்ணத்தை இந்திய கிரிக்கெட் குழு வெற்றி பெற்றது.

## ஜூலை

6-ம்: பாகிஸ்தானில் ஜனுதிபதி ஷியாவின் ஆட்சிக்கு எதிராக பலர் கைது செய்யப்பட்டனர்.

## 1983 நாட்குறிப்பிலிருந்து

10-ம்: நேபாள பிரதமர் ஆர்யபகதூருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

20-ம்: பாகிஸ்தான் ஆயுதத் தடைக்கு ஒப்பந்தம் செய்யாது என அறிவிக்கப்பட்டது.

22-ம்: போலந்தில் ராணுவ ஆட்சி ரத்துச் செய்யப்பட்டது.

## ஆகஸ்ட்

2-ம்; பாகிஸ்தானுக்கு மிக நவீன ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்தது.

4-ம்; இத்தாலியில் புதிய பிரதமராக பெட்டிேனு க்ராக்சி பதவி ஏற்ருர்.

9-ம்; புதுடில்லியில் இரண்டு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து 17 பேர் பலியாகிர்ன.

11-ம்; நைஜீரிய அதிபர் ஷெஹுஷாகரி தன்னை எதிர்த்த ஐந்து பேரையும் தோற்கடித்து இரண்டாவது தடவை ஜனுதிபதியாக பதவி ஏற்ருர்.

12-ம்: இரா. ஜனுர்த்தனன் அ.தி.மு.க விலிருந்து ராஜினுமா செய்தார்.

17-ம்; தமிழக முன்னுள் அமைச்சர் கே. ஏ. மதியழகன் காலமானுர்.

21-ம்; வெளி நாட்டிலிருந்து நாடு திரும்பிய பிலிப்பைன்ஸ் எதிர்கட்சித் தலைவர் பெனிக்னே எஸ் அக்னே சுட்டுக் கொல்லப்பட்டார்.

22-ம்; மொரிஸியஸ் பொதுத் தேர்தலில் பிரதமர் ஜகத்தாத் தலைமையிலான மூன்று கட்சிகள் கூட்டணி வென்றது.

28-ம்: பாகிஸ்தானில் முன்னுள் பிரதமர் பூட்டோவின் குடும்பத்தினர் 11 பேர் சிறையிடப் ட்டனர்.

## செப்டம்பர்

1-ம்: 269 பயணிகளுடன் தென் கொரிய விமானம் ஒன்றை சோவியத் சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா அறிவித்தது.

5-ம்: அமெரிக்க விண்வெளி ஓடம் செலஞ்சர் கலிபோர்னியாவில் இறங்கியது. அமெரிக்காவின் வேவு விமானம் என நினைத்து தென்கொரிய விமானத்தை சோவியத் சுட்டதாக அறிவித்தது.

19-ம்: சைப்பிரஸ் நாட்டுக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் அங்கும் இலங்கைத்தமிழர் நிலை பற்றி விளக்கினுர்.

22-ம்: கிரீஸ் நாட்டுக்கு இந்தியப் பிரதமர் திருமதி காந்தி விஜயம் செய்தார்.

அபுதாபி சர்வதேச விமான நிலையம் அருகில் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியது. 112 பயணிகள் மாண்டனர்.

26-ம்: லெபனுன் பிரதமரும் அமைச்சர்களும் ராஜினுமா செய்தனர்.

27-ம்: அணிசேரா நாடுகளின் 19 தலைவர்கள் நியூயோர்க்கில் சந்தித்து பேசினர்.

28-ம்: ஐ. நா. வின் 38வது கூட்டத்தொடர் ஆரம்பமானது.

## அக்டோபர்

5-ம்: போலந்தின் சாலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லேவலேசா இந்த ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

9-ம்: பர்மாவில் ரங்கூனிலுள்ள தேசத் தியாகிகள் நினைவுச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்தும் வைபவத்தில் குண்டு வெடித்து 4 தென் கொரிய அமைச்சர்களும், 11 அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டனர்.

12-ம்: இலங்கைக்கு ஆயுத உதவி கொடுக்கக் கூடாது என்ற கோரிக்கை எழுப்பி அ.தி.மு.க. வினர் அமெரிக்க தூதரகத்தை நோக்கி ஊர்வலம் நடத்தினர்.

14-ம்: தி.மு.க. வின் ஒரு கோடி கையெழுத்து மனு ஐ. நா. வில் கையளிக்கப்பட்டது.

19-ம்: பௌதீகத்துறைக்கான நோபல் பரிசு தமிழ் நாட்டைச் சேர்ந்த சந்திரசேகருக்கு வழங்கப்பட்டது.

20-ம்: கிரெனடாவில் ராணுவப்புரட்சி.

23-ம்: லெபனுனில் தற்கொலைப் படையினர் லொறியில் குண்டுகளை ஏற்றிக் கொண்டு அமெரிக்க ராணுவ தலைமையகத்துடன் மோதியதில் குண்டு வெடித்து 135 அமெரிக்க வீரர்கள் பலியாகினர்.

25-ம்: கிரெனடா மீது அமெரிக்கா படையெடுப்பு.

28-ம்: கான்பூரில் பாலம் ஒன்றில் பயணிகள் பஸ் வீழ்ந்ததால் 80 பேர் பலி.

29-ம்: இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் 29வது செஞ்சரி அடித்து உலக சாதனையை ஈடு செய்தார்.

## நவம்பர்

4-ம்: ரங்கூன் குண்டு வெடிப்பின் காரணமாக வடகொரியாவுடனுன உறவுகளை பர்மா துண்டித்தது.

15-ம்: சைப்பிரசிலுள்ள துருக்கியர் சுதந்திர பிரகடனம் செய்தனர்.

17-ம்: மகாராணி எலிசபேத்தும் அவரது கணவரும் இந்திய விஜயம் மெற்கொண்டனர்

23-ம்: காமன்வெல்த் தலைவர்கள் மாநாடு புதுடில்லியில் தொடங்கியது.

27-ம்: ஸ்பெயினில் கொலம்பிய விமானம் விபத்துக்குள்ளாகி வெடித்ததில் 180 பேர் மாண்டனர்.

## டிசம்பர்

4-ம்: லெபனுனில் அமெரிக்க ராணுவத் தளம் மீது சிரியா தாக்குதல் நடத்தியது.

8-ம்: லெபனுனில் பலத்த சண்டை நடைபெற்றது.

12-ம்: ஆர்ஜன்டீனுவில் மீண்டும் ஜனநாயக ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. கிரெனடாவிலிருந்து அமெரிக்க துருப்புக்கள் வெளியேற்றம் இடம் பெற்றது.

15-ம்: இந்திய விமானப் படையின் பலம் அதிகரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் விமானங்கள் பல கொள்முதல் செய்யப்பட்டன. தமிழக அரசுக்கு எதிராக எதிர்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. லெபனுனில் சிரிய நிலைகள் மீது தொடர்ந்து அமெரிக்கா தாக்கியது.

18-ம்: லண்டனில் கிறிஸ்மஸ் வியாபாரம் நடந்து கொண்டிருந்த பிரபல நிறுவனத்தின் முன் குண்டு வெடித்தது. 5 பேர் பலியாகினர்.

20-ம்: லெபனுனிலிருந்து அரபாத் சனது 4000 வீரர்களுடன் வெளியேறினுர். ★

# கிராமோதயசபை தலைவர்கள் அபிவிருத்திசபைபோஷகர்கள்

(புலோலி)

கிராமோதய சபைத்தலைவர்கள் அபிவிருத்திச்சபை உப-அலுவலகங்களின் போஷகர்களாக நியமிக்கப்படுவார்கள் என உள்ளூராட்சி ஆணையாளர் திரு. பெரகும் விஜயசிங்க அறிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி மேம்பாட்டைக்கருத்திற்கொண்டே ஆணையாளர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். ஒவ்வொரு உப-அலுவலகத்திற்கும் அந்தப் பிரதேசத்தில் உள்ள கிராமோதயசபைத் தலைவர்களில் ஒருவரை போஷகராக நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாவட்டச் செயலாளர்களுக்குப் (அரசாங்க அதிபர்கள்) பணிப்புரை வழங்கியுள்ளார். போஷகர்களாக நியமிக்கப்படும் கிராமோதய சபைத்தலைவர்களுக்கு அந்தந்த உப-அலுவலகங்களில் அலுவலக வசதிகள் செய்துகொடுக்கப் படவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உப-அலுவலகப் பிரதேசத்தில் இடம்பெறவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி போஷகர்களாக நியமிக்கப்படும் கிராமோதயசபைத்தலைவர்கள் அபிவிருத்திச்சபைகளுக்கு எடுத்துக் கூறுவார்கள். இத்திட்டத்தின் கீழ் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவாக்கி மேம்படுத்தமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-02: ஒன் வீ கோ (ஆங்கிலம்.

6-15: விளையாட்டுப்பயிற்சி.

6-30: ஆங்கில நிகழ்ச்சி.

7-00: செய்திகள் (தமிழ்).

7-15: ஜப்பான்பற்றிய தகவல்நிகழ்ச்சி.

8-15: நாடக நிகழ்ச்சி

9-30; செய்திகள் (ஆங்கிலம்)

9-50: 'பிக்வலி' (ஆங்கில தொலைக்காட்சி சித்திரம்)

10-40: இசை நிகழ்ச்சி.

11-45: தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிகழ்ச்சி.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 16ம் திகதி
சனிக்கிழமை
(31-12-83)

மேடம்: குடும்பம் இன்று களிக்கும் இனிக்கும் மது இருக்கும் இடம் மனம் நாடும் அன்புக்குரியவர்களே காலை வாரிவிடுவர் பிரிவும் ஆயுத பீடையும் இடம் வகிக்கும்.

இடபம்: களஸ்திரவழியால் கண்ணியம் சேரும் காதல்களை காதை துளைபோடும் இதயம் இன்பத்தால் விம்மும் தொழில் துறையில் செந்தழிப்பு உண்டாகும் சுபதினம்.

மிதுனம்: வீராப்பு விபரீதத்தை கொடுக்கும் சிந்தனை மந்தமடையும் ரோகங்களுமுண்டு நின்று நிதானித்து அமைதியுடன் செயல்படவும்.

கடகம்: பிதாவழியால் பெருமைக்கு இடமுண்டு மனம் போல் வாழ்வு இன்று மலரும் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

சிங்கம்: தொழில் துறையில் உயரிய வாய்ப்புகள் உண்டு எதிர்பாராத இடத்தில் இருந்து அழைப்புக் கிடைக்கலாம் திடீர் லாபங்களும் இடப்பிரிவுகளும் ஏற்படலாம்நல்லதினம்.

கன்னி: எதிர்பாராத வரவுகளுக்கிடமுண்டு வாழ்க்கையில் நல்ல மாற்றம் தென்படும் பேச்சு இன்று மற்றவர்களுக்கு இனிக்கும் குடும்பத்தில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறலாம்.

துலாம்: உறவு முறையில் பிளவு தோன்றக்கூடும் பண விடயங்கள் பகையை உருவாக்கும் தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும் கண் துடைப்பு வேலைகளும் ஏற்படும்.

விருச்சிகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும் எக்கருமத்திலும் தடைகள் தோன்றும் மனதில் அமைதி குன்றும் உடல் நிலையை பேணவும்.

தனுசு: தனத்துடன் வாழ்வு இன்று தவறாது கிட்டும் நீண்ட நாள் கடன் நிவர்த்தியாகும் வியப்பூட்டும்செய்தியும்கிடைக்கும். எதிர்பாராத முனையில் இருந்து ஆபத்து உருவாகும்.

மகரம்: இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் அவதானத்துடன் செயல்படவும்நிதானம் நன்று.

கும்பம்: வாழ்க்கையில்திருப்பமும் எதிர்பாராதவரவும் குடும்பத்தில் குதூகலச் சுவைக்கும் தகுதியில் முன்னேற்றம் உண்டாகும்.

மீனம்: எண்ணம் போல் வாழ்வு மலரும் சிலருக்குதிடீர் லாபங்களுமுண்டு கலகலப்பானதினம் புத்திர மகிழ்ச்சியும் காரியசித்தியுமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# சாதனைவீரர் கவாஸ்கருக்கு தமிழ்நாடு ஆளுநர் பாராட்டு

(சென்னை)

இந்திய - மேற்கிந்திய அணிகளிடையே சென்னையில் நடைபெற்ற 6-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்றைய ஆட்டத்தில் உலக சாதனை வீரர் சுனில் கவாஸ்கர் 236 ஒட்டங்களுடனும், வீரர் கிர்மானி 63 ஒட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தது சிறப்பம்சமாகும்.

ஸ்கோர் விபரம்: இந்தியா-451—8. மே. இந்தியா; 313, 64—1.

இந்த 6-வது டெஸ்ட் போட்டியில் வீரர் கவாஸ்கர் ஏற்படுத்திய புதிய சாதனைகளுக்காக தமிழ்நாடு ஆளுநர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வீரர் சுனில் காவஸ்கர் இப் போட்டியில், 30-வது செஞ்சரியை அடித்து புதிய உலக சாதனையையும், இதுவரை காலமும் இந்திய கிரிக்கெட் வீரர்களிடையே மிகக்கூடுதலான ஒட்டங்களை 28 ஆண்டுகளுக்குமுன் நியூஸிலாந்தில் 231 ஒட்டங்களை எடுத்த முன்னாள் வீரர் மன்காட்டின் சாதனையை வீரர் கவாஸ்கர் 236 ஒட்டங்களை ஆட்டமிழக்காது எடுத்து முறியடித்தார். வீரர் கவாஸ்கர் மே. இந்தியக் கோஷ்டிக்கு எதிராக இதுவரை நாலு இரட்டை செஞ்சரிகளை எடுத்ததும் ஒரு சாதனையாகும். இவர் இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி மொத்தம் 8,394 ஒட்டங்களை எடுத்துள்ளார். (வி)

## சஷ்டியப்த பூர்த்தி

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வரசர்மாவின் சஷ்டியப்தபூர்த்தி நிகழ்ச்சிகள் அவரது இல்லத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப)

## பொங்கல் கரபந்தாட்டம்

[வவனியா]

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வவனியா கலைமகள் சனசமூக நிலையம் வவனியா-முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களிடையே நான்குபேர் கொண்ட 30 நிமிட நேர ஒரு நாள் 'நொக்கவுட்' கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடாத்தவிருப்பதாக சன சமூக நிலையச் செயலாளர் திரு. இ. செல்வராஜா அறிவித்துள்ளார்.


★ புத்தாண்டு வாழ்த்துக்கள் ★

மக்கள் அனைவரும் மங்களகரமாக,
அமைதியாக வாழ
புத்தாண்டே வருக! வருக!
மக்களுக்கு நல் வாழ்வும்,
பொதுப்பணிளுக்கு நல்லாதரவும் தருக!
1983ல் ஆதரவளித்த அனைவருக்கும்
எமது நன்றி.




ரூபா 2-50

திருப்திகரமான சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீலசோப்
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்



I. N. S.
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
G. S. Q. (MATHS)
கல்வியாண்டு 1984ற்கான புதிய பிரிவு
ஆரம்பம் 1—1—84

| | |
|---|---|
| தூயகணிதம் | வேலும்மயிலும் |
| பிரயோக கணிதம் | சுதாகர் |
| புள்ளிவிபரவியல் | சண்முகநாதன் |

இவ்விரிவுரையாளர் குழு
I. N. S. கல்வி நிறுவனத்தில்
மட்டுமே விரிவுரையாற்றுவார்கள்.
(10849)



உங்கள் பயிர்களைப் பூச்சி புழுக்களிட
மிருந்து பாதுகாத்துக்
கொள்ளப்பாவியுங்கள்
அங்லோ-ஏஷியன்
மொனோகுரோட்டோபொஸ் - 60%
பரத்தியன் ஈ 50%
விளைச்சலைப் பெருக்கச் சிறந்தது




அங்லோ - ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட் பேங்க் கட்டிடம். கொழும்பு 1.

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

வெகுவிரைவில்
சிவாஜி-சௌகார்-நாகேஷ்
**பாபு** (புதிய பிரதி)



**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
சிவகுமார் - சுஜாதா
**அன்னக்கிளி**



**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**கணவன்**
(புதிய பிரதி)


## யாருடையது?

மண்டைதீவைச் சேர்ந்த எஸ். ஏ. தயாளன் அல்வாயைச் சேர்ந்த இரத்தின சபாபதி கிருஷ்ணராஜன் என்பவரின் அடையாள அட்டையைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

°° °° °°

நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த திரு கு. பிரேமானந் என்பவர் அன்னசத்திர ஒழுங்கையிலிருந்து பணத்துடன் கூடிய பேர்ஸ் ஒன்றினையும், யாழ். பஸ் நிலையத்திலிருந்து திரு. ஐ. சச்சிதானந்தம் என்பவர் திரு. குருநாதப்பிள்ளை தம்பிப்பிள்ளை என்பவருடைய அடையாள அட்டையையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி
கே. ஆர். விஜயாவின்
**ஊரும் உறவும்**
— வண்ண திரைஓவியம் —
மகளிர்க்கேற்ற குடும்பச் சித்திரம்! அரியசந்தர்ப்பம்!! (கடைசி வாரம்)



**ஹரன்** (யாழ். நகர்)
Charles Bronson
Lee Marvin in
**Death Hunt**
(Color)



**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)



**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
5—1—84 வரை
ஜெமினி — பத்மினி
**அன்னை வேளாங்கன்னி**



**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
**The Shining**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீபிரியா- அம்பிகா
**சங்கிலி** (புதிய பிரதி)



**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3—வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா



**றீகல்** (யாழ்நகர்) **இன்றுமுதல்..** தொடரும்
தினசரி 10.30, 2.30, 6.15, மாலை 9 00மணி தொடங்கும்

★ இளையநிலா பொழிகிறதே இதயம் வரை நனைகிறதே...
★ ராகதீபம் ஏற்றும் நேரம் புயல் மழையோ......
★ தோகை இளமயில் ஆடிவருகுது வானில்மழை வருமோ......
★ ஆத்தா ஆத்தோரமா வாரியா நான் பாத்தா பாக்காமலே ......
★ சாலையோரம் சோலை ஒன்று வாடும் சங்கீதம் பாடும்...
★ மணிஓசை கேட்டு எழுந்து நெஞ்சில் ஆசை கோடி சுமந்து......
★ வைகறையில் வைகைக் கரையில் வந்தால் வருவேன் உன்...

ஆகிய தேன் சிந்தும் 7 கீதங்களுடன்
நெஞ்சத்தைக் கிள்ளும் மோகன்
புதுமுகமாக பூர்ணிமா ஜெயராம்
தனிமரமாக ராஜேஷ்
கலகலப்புக்கு கவுண்டமணி......இன்னும்
இத்தனைபேர் சேர்ந்தும்
**பயணங்கள் முடிவதில்லை**
(ஈஸ்ட்மென் கலர்) பொன்விழா காவியம்



**யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி**

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
**குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
போர்த்துக்கல் (PORTUGAL) ஸ்பெயின் (SPAIN) வழியாக
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பயணச்சீட்டுக்களை
மிகக்குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

**CROSS TRAVEL SERVICES (PTE) LTD.**
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040



அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
இல்லத்தரசிகளுக்கு இனியதோர் **நற்செய்தி!**

SHOBA

**சமையல் கலைக்குச் சேவைசெய்வது**
**ஷோபா ஸ்தாபனத்தாரின் பணி**

அவசர உலகில் சில நிமிடங்களில் சுலபமாக சமைப்பதற்கு
பணிபுரிவது எமது தயாரிப்புக்கள்
நேரத்தோடு போராடும் உத்தியோகம் பார்க்கும்
பெண்மணிகளும் பதட்டமின்றிச் சமையல்பணி செய்துபோக
எமது தயாரிப்புக்கள் உதவுகின்றன

★ மிளகாய்த்தூள் ★ கறிச்சரக்குத்தூள்வகைகள்
★ மோர் மிளகாய் ★ நிலக்கடலை முதலியன

25 கிறும் / 200 கிறும்—ரூபா 1/- முதல் 12/-வரை
எங்களிடம் இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த கொழும்பு "எலிபன்ட் ஹவுஸ்" ஸ்தாபனத்தாரின் அதி உன்னத—ருசிமிக்க— தரத்திற்கு உத்தரவாதமான பின்வரும் உணவுப்பொருட்கள் 100 கிறும் முதல் 450 கிறும் வரையிலான நிறைகொண்ட பைக்கெட்டுகளில்
ரூபா 3-25ல் இருந்து ரூபா 40/-வரையிலான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்

● புறெயிலர் சிக்கின் ● ஸ்றேகி பேக்கன் ● போக்கீஸ்
● பாக் பேக்கன் ● போக் சொஸேஜெஸ்
● பீவ் சொஸேஜெஸ் ● ஐஸ் கிறீம் ● ஐஸ் சொக்ஸ்
● பேர்க் அத்துடன் ● கிறவுண் பீவ்

★ ஆட்டாமா ★ குரக்கன்மா
★ கோப்பி பவுடர் ★ தேயிலை


50 கிறும் / 200 கிறும்—ரூபா 3-75 முதல் ரூபா 14/-வரை
சரியான அளவுகளில் உறுதியான பைக்கெட்டுகளில் குடாநாட்டின்
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
ஒரு முறை விஜயம்செய்யுங்கள்! தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறோம்!!

**ஷோபா ஏஜென்சீஸ் லிமிட்.**
194, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்



மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன்
ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்
நாடவேண்டியது

**வீனஸ்** 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்




யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் புனரமைப்புப் பெற்றுள்ள சம்பந்தன் வைத்திய நிலையத் திறப்புவிழாவில், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, வைத்திய நிலையத்தின் பெயர் பலகையைத் திரை நீக்கம் செய்து வைக்கிறார். பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. குமரேந்திரன், வைபவத்திற்குத் தலைமை வகித்த சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், திரு. எம். ஜெகராஜா (மெர்க்கண்டைல்) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## நூல் விமர்சனம்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

லாறு பற்றிய கட்டுரையும் படங்களும் ஆலயம் சம்பந்தமான மலர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருக்கின்றன. ஆலயம் தோன்றிய காலம்பற்றிய கச்சேரித்தோம்பு கூறுவது, ஆலயத்தைப் பரிபாலித்தவர்கள் பற்றிய குறிப்பு; நித்திய பூசைக்குத் திட்டமான ஒழுங்கு செய்தவர் காலம் போல்வன; கோவில் நிலம் விசாலிக்கப்பட்டகாலம்; தீர்த்தக்கிணறு அமைத்தற்கு ஆரம்பித்த முகூர்த்தம் என்பன இவ்வாலய வரலாற்றிற் குறிக்கப் பெற்றிருப்பது வரலாற்று அடிப்படையையும் ஆலயங்களின் வளர்ச்சிப்போக்குகளையும் அறிய உதவும் சிறந்த வழிகாட்டியாகும்.

,சிரமதானம் மூலம் இக் கோவிலின் பெரும்பகுதி வேலையை இந்த இளம் சந்ததியினர் பூர்த்திசெய்யும் ஆற்றல் நம்முன்னோரின் தவத்தின் விளைவு கந்தபுராண கலாசாரம் உற்பத்தி செய்த 'ரைம்பொம்' எனலாம்.''

''எங்கள் தாய் தந்தையர், மற்றைய அயலவர் சுற்றத்தவர் அனைவரும் காலையிலும், மாலையிலும் அம்பாளின் பூசைமணி ஒலிக்கும்போது அம்மாளே! தாயே! என்றுபிரார்த்தனையைத் தொடங்கி ஆண்டிக்கேணி ஐயனுரையும், அம்பலவி முருகர் வைத்த கல்லையும் நினைந்துமனம் நெக்கு நெக்குருகி, கைகூப்புவது பரமசிவனுடைய பிரார்த்தனை ஒருவருடைய குலதெய்வத்தில் ஆரம்பமாவதை உணர்த்தின்றது.''

என்பனபோன்ற குறிப்பிடத்தக்க பலபகுதிகளை உடையதாய் சக்தி தத்துவத்தையும் 'மூர்த்தி பேதங்களையும் நன்கு தெளியவைக்கும் நீலிப் பந்தனை அம்மை; உலக அன்னை,' என்னும் கட்டுரை இந்நூலிற்குத் தனித்துவமானதொரு தகுதியைக் கொடுத்துள்ளது.

—தி.பொன்னம்பலவாணர்


## மரண அறிவித்தல்

### ஆ. தர்மலிங்கம் (காங்கேசு)

மலேயா போஸ்ரல் டிப்பாட்மென்ற் பென்ஷனர் ஆறுமுகம் தர்மலிங்கம் 1983 மார்கழி மாதம் 21-ம் திகதி மலாயாவில் காலமானார்.

இவர் தொண்டமானாற்றில் இருக்கும் மலாயன் பென்ஷனர் ஆறுமுகம் தில்லையம்பலத்தின் சகோதரராவார்.

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

(10888)

# HOTEL GNANAMS

NEW YEAR'S

Eve

FAMILY DINNER

MENU

- Black Pepper Steak,
  Chef's Special
  Chicken Buriyani or Fried Rice,
  Chop - Suey Noodles or Rice

Any Items 50/- Only.


## 10 லட்சம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மாக அரசு ஆரம்பத்தில் கொந்தராத்துக்காரர்களைக் கொண்டு வீடுகளைக் கட்டி வழங்கியது அதனைத் தொடர்ந்து மாதிரிக்கிராமங்களில் சுயவீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகளை கட்டி வழங்கி வருகிறது. 1984ம் ஆண்டு ஜனவரி முதல் 10 லட்சம் வீடமைக்கும் திட்டத்தின் ஒரு கிராம சேவர் பிரிவில் 250 வீடுகளை அமைக்க, வீடுகளைத் திருத்த, கிணறுகள் வெட்டிக் கட்ட, மலசலகூடம் அமைக்க வீடுகளுக்கு மின்சார இணைப்புகள் ஏற்படுத்த பல விதமான கடன்களை வழங்கி ஏழை மக்களின் வாழ்க்கையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த பிரதமர் திட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்றார். (கு)

## உறுப்பினர்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. எம். பி.க்கள், உறுப்பினர்கள் எவருமே கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, பிரதிச் செயலாளர் திரு. எம். பஞ்சலிங்கம் (கணக்குப்பகுதி), திரு. அன்ரன் அம்பிரட் [நிர்வாகம்-வேலை-சட்டம்], திரு. எஸ். சிவதாசன் [திட்டமிடல்] யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு எஸ். பி. பாலசிங்கம், யாழ். மாவட்ட சபைக்கணக்காளர் திரு. கே, எம். இராசேந்திரன், உதவிச் செயலாளர்கள் திரு வி. பி. பாலசிங்கம் உட்படப் பல உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத் திட்டத்தின்படி யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கு மூன்று வழிகளில் நிதிபெறப்பட்டுள்ளது.

ஃ பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட மூலதன வருமானம்: 46 லட்சத்து 58 ஆயிரம் ரூபா.

உள்ளூராட்சி ஆணையாளர் நன்கொடை: 14 லட்சத்து 39ஆயிரத்து 500 ரூபா.

ஃ யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை நிதியம்: 22லட்சத்து 47 ஆயிரத்து 850 ரூபா.

மொத்த வருமானம் ரூ. 6 89,63000.

மொத்தச் செலவு ரூ. 6,88 86,000. [மா-கு]

## எதிரி விடுவிலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுகளால் வழக்கை தொடர்ந்து நடத்த முடியாதிருப்பதாலும், சாட்சி இவக் கொழுந்து பிறநாட்டுக்குச் சென்றுவிட்டதாக பொலிஸ் சார்ஜன்டின் சாட்சியத்தின் மூலம் மன்றுக்கு அறியக்கூடியதாக இருப்பதால் குறித்த சாட்சிக்குப் பகிரங்கபிடி ஆணை விடும்படியும், 5000 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணை கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிடுகிறேன். இந்தநிலையில் இந்த எதிரியை, இந்த வழக்கில் தற்போதைக்கு விடுவிக்கிறேன்.

''சாட்சி பகிரங்க பிடியாணையில் கைதுசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டால், இந்த எதிரிக்கு எதிராக மீண்டும் இந்த வழக்கு திருப்பி நடைபெற வேண்டுமென்றும் ஆணையிடுகிறேன். தற்போதைக்கு இந்த எதிரி இந்த வழக்கிலிருந்து நீக்கப்படுவார். (க

## மற்றுமொரு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிவிக்கப்பட்டிருந்தது தற்போது வினாத்தாள் I-ம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த 20-ம் திகதி ஆரம்பமான இப்பரீட்சை நேற்றுடன் முடிவடைந்தது. (கு)

## 14 அம்சங்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் என்று சில பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்தே மாநாட்டுக்கான ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்ட தகவலை வெளியிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதுவித ஆலோசனைகளையும் அரசாங்கம் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்த அவர், யோசனைகளை மாநாட்டில் கலந்துகொள்வோரே சமர்ப்பித்து மாநாடு ஆராயும் என்றும் மாநாட்டு முடிவை அரசு பரிசீலனை செய்யும் என்றும் தெரிவித்தார். (கு)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

○மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினாகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் மாவட்டங்களை ஒருங்கிணைத்தல், இலங்கை முழுவதற்கும் பொருந்துவதாகும்.

○ஒரு பிரதேச சபையின் முதலமைச்சராகப் பெரும்பான்மை பெறும் கட்சியொன்றின் தலைவரை ஜனாதிபதி முறையாக நியமிப்பார். முதலமைச்சர் தமக்கு வேண்டிய ஆட்களைக் கொண்ட ஒரு குழுவைத் தெரிவுசெய்து ஆட்சி நிர்வாகஞ் செய்யலாம்.

○இலங்கைக் குடியரசின் முழுவதினதும் இறைமை, ஐக்கியம், பாதுகாப்பு, வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவற்றின் பொறுப்பு தொடர்ந்தும் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் கையிலிருக்கும்.

○பிரதேசத்துக்குக் குறித்தொதுக்கப்சட்டவற்றை நிறைவேற்றல், வரிகள், தீர்வைக் கட்டணங்கள் ஆகியவற்றை அறவிடுதல், கடன்களைப்பெறுதல், மத்திய அரசிடமிருந்து மான்யம், ஒதுக்கீடுகளைப்பெறுதல் போன்ற அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்குக் கிடைக்கும்.

○திருகோணமலைத் துறைமுகம் தொடர்ந்தும் மத்திய அரசின் நேரடி நிருவாகத்தில் இருக்கும்.

○ஒவ்வொரு பிரதேசத்திலும் மேல்நீதிமன்றங்கள் இருக்க, இலங்கை உயர்நீதிமன்றம் அரசியல் யாப்புக்கமையத் தனியாக இயங்கும்.

○பிரதேசத்துக்குப் பிரதேசம் சேவையாற்றக்கூடிய துறைமாற்றுச் சேவைக்கு மாற்றப்படக்கூடிய பிரதேச சேவையை நிறுவுதல்.

○உத்தியோகங்களுக்கான ஆட்சேர்ப்புக்கும், ஒழுக்காற்றுக்குமென பிரதேச பகிரங்க சேவை அமைத்தல்.

○பகிரங்க சேவைக்கும் ஆயுதப் படைகளுக்கும் இனவிகிதாசாரத்துக் கேற்பத் தெரிவு செய்தல்.

○பிரதேச உள்ளகப் பாதுகாப்புக்கான பொலிஸ் சேவையை அந்தந்தப் பிரதேச இன அமைப்புக்கேற்ப உருவாக்கல்.

○காணி நிர்ணயம் பற்றிய ஒரு தேசியக் கொள்கையை உருவாக்கல்.

○சிங்கள அரச கரும மொழி, தமிழ்த் தேசிய மொழிச் சட்டங்கள் தேசியக்கொடி தேசிய கீதம் ஆகியவை அதே முறையில் தொடர்ந்திருத்தல்.

○அரசியல் நோக்கங்களுக்காக வன்செயலில் (பயங்கரவாதத்தில்) ஈடுபடுவதை ஒன்றுபட்டு எதிர்த்தல்.


## மரண அறிவித்தல்

### சோ. ஸ்ரீநாதன்

யாழ். அத்தியடியைச் சேர்ந்த சோமசுந்தரம் தம்பதிகளின் புதல்வர் ஸ்ரீநாதன் (ராஜா தியேட்டர்) காலமானார். காலஞ்சென்ற செல்வமலரின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (கண்டி ஆஸ்பத்திரி), ஸ்ரீஸ்கந்தராஜா (யாழ். தபால்கந்தோர்) ஸ்ரீரஞ்சன் (திரைப்படக்கூட்டுத்தாபனம்) புவனேந்திரன் (வெலிங்டன்) சந்திராதேவி (வேம்படி) கருணைநந்தன், ஜெயஸ்ரீ (பிரான்ஸ்) விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சொக்கலிங்கம் (வ.பி.கோ.சபை) பத்மநாதன் (உரிமையாளர், விஜயா டிரேடிங் - கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இறுதிச்சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு 315, நாவலர் வீதியில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(10861)

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்நாயகி செல்வத்துரை

கட்டுகாஸ்தோட்டை பாலத்தை நிர்மாணித்த முன்னாள் கந்தரோடை வேலுப்பிள்ளை முதலியார் (கம்மானியார்) திருமதி வேலுப்பிள்ளை முதலியார் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முதலியார் குமாரவேற்பிள்ளை (கந்தரோடை ராசா), திருமதி குமாரவேற்பிள்ளை ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற புரக்டர் V. S. பொன்னம்பலம் JPUM, திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்ற சட்டத்தரணி வெற்றிவேற்பிள்ளை செல்வத்துரையின் JPUM வாழ்க்கைத்துணைவியும், பகீரதி, நிர்மலா, சாரதா, அம்பிகை, சண்முகதாஸ் (சட்டத்தரணி-கொழும்பு), செந்தில்வேல் (Fisheries Inspector), சிவசக்திவேல் (ஆசிரியர் பாரதி மகாவித்தியாலயம்-பதுளை), கதிர்காமஜோதி ஆகியோரின் அருமைத் தாயாரும், K. C. பத்மநாதன் (முன்னைநாள் சிறுப்பர், கொங்கொங் வங்கி), P. நவரத்தினம் (முன்னைநாள் விரிவுரையாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ். சிவமோகன் (முகாமையாளர் Al Shawi Trading Establishment, Oman), சட்டத்தரணி K. உலகநாதன் JPUM, வரலக்ஷ்மி (ஆசிரியை வைத்தீஸ்வர வித்தியாலயம்), ஷண்முகலக்ஷ்மி (ஆசிரியை வட்டு இந்துக் கல்லூரி), அன்னபூரணி (ஆசிரியை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்-பதுளை) ஆகியோரின் மாமியாருமான திருமதி தையல்நாயகி மார்கழி 20-ல் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கந்தரோடையில் நடைபெற்றது. மோசமான காலநிலைச் சீர்கேட்டால் அன்னாரின் பிரிவை உடன் அறிவிக்க முடியாததற்கு வருந்துவதோடு இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

(10881) மக்கள் மருமக்கள்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், ... 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box 49, Telephone: 22389 — 24126.